விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 04 சனிக்கிழமை (17.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

## இரு பொலிஸார் உட்பட யாழ். மாவட்டத்தில் 7 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் இருவர் உட்பட யாழ்.மாவட்டத்தில் மேலும் 7 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை நேற்று வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று 19



## வரணியில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் - பருத்தித்துறை வரணி எல்லைப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 19 வயது இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரி 19

## இந்தியாவில் கொரோனா தாண்டவம்

(கொழும்பு)

இந்தியாவில் இரண்டாவது நாளாகவும் 2 இலட்சத்தை 19

## கொரோனா 7 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார 19

## கிளிநொச்சியில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் கிளிநொச்சியிலுள்ள கோணாவில் மத்திய பிர 19

# தொலைபேசி மூலம் ஜனாதிபதி கோட்டா உயிர் அச்சுறுத்தல்

## பாதுகாப்புக் கோரி பொலிஸ்மா அதிபரிடம் விஜயதாஸ ராஜபக்ஷ முறைப்பாடு



*(கொழும்பு)* ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொலைபேசி மூலம் தன்னை அச்சுறுத்தியதாக முன்னாள் நீதி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தனதும் தனது குடும்பத்தினரதும் பாதுகாப்புக் கருதி இது தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடும் செய்துள்ளார். *(19ஆம் பக்கம் பார்க்க)*

## வடமராட்சி கிழக்கு முள்ளிப் பகுதியில் விசேட அதிரடிப் படை துப்பாக்கிச் சூடு

### இரு இளைஞர்கள் படுகாயம்



(குப்பிழான்)

சட்டவிரோதமாக மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் மீது விசேட அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிக்கி இரு இளைஞர்கள் படு 19

## பால் புரைக்கேறியதில் 4 மாத குழந்தை மரணம்

### கிளிநொச்சி குமுழமுனையில் சம்பவம்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பிரதேசத்திற்கு உட்பட்ட குமுழமுனைப் பகுதியில் நான்கு மாத ஆண் குழந்தை ஒன்று பால் புரைக்கேறி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

குறித்த சம்பவம் 19

## யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிலையங்களை

### திங்கள் முதல் திறக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தனியார் கல்வி நில்லயங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் திறக்கப்படும் என யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை 19

### அயல் நாடுகளில் கொரோனா தீவிரம்

## சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக பின்பற்றப்படும்

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

இலங்கையின் அயல் நாடுகளில் கொரோனாத் தொற்று பரவல் தீவிரமடையும் நிலையிலேயே சுகாதார பாதுகாப்பு கட்டுப்பாடுகளை 19

## யாழ்.கல்வி வலய பாடசாலைகளின்

### கற்றல் நடவடிக்கைகள் திங்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொரோனா அச்சுறுத்தலால் மூடப்பட்டிருந்த யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கள் தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன.

அதற்கான அனு 19

## முல்லைத்தீவில் குடும்பஸ்தர் மீது கத்திக்குத்து

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளியவளை நீராவிப்பிட்டி பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக கத்திக்குத்துக்கு இலக்கான குடும்பஸ்தர் 19

## முற்றத்தில் கிடந்த கோடரியை எடுத்தவருக்கு மின்னல் தாக்கம்

### வைத்தியசாலையில் அனுமதி புதுக்குடியிருப்பில் சம்பவம்

(முல்லைத்தீவு)

மழை பெய்து கொண்டிருந்த நிலையில் முற்றத்தில் கிடந்த கோடரியை எடுத்து வைக்க சென்றவர் மின்னல் தாக்கியதில் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் முல்லைத்தீவு - 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் எல்லா இனத்தவர்களுக்குமான வரன்கள் உள்நாடு, வெளிநாடு, அரச உத்தியோகம், அரச சார்பற்றவர்கள் உட்பட எல்லாவித மணமக்களும் எம்மிடம் உண்டு. எல்லா மணமகள், மணமகனாயினும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு (6592)

**நல்லூர் கந்தன் திருமண சேவை**

**வி. ஜெயந்தி 077 973 3183**


## Invitation for Bids (IFB-2021 / 05) Department of Irrigation, Northern Provincial Council.

பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களால் 6 எண்ணிக்கையிலான வேலைகளுக்கு தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்பட்டுள்ளன. இக் கேள்வி தொடர்பான மேலதிக் விபரங்களை 13.04.2021 வெளிவந்த Daily News பத்திரிகையில் பக்கம் 12 இல் பார்வையிடவும்.

(C-1989)

**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

# யாழ். நகரில் முடக்கப்பட்ட பகுதியை சேர்ந்த வர்த்தகர்களுக்கு இன்று பி.சி.ஆர் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தாக்கத்தின் காரணமாக யாழ்.நகரில் முடக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், ஊழியர்கள் இதுவரை பிசிஆர் பரிசோதனை செய்யாமலிருந்தால் இன்று சனிக்கிழமை காலை 7 மணி முதல் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறும் பிசிஆர் பரிசோதனையில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் அறிவுறுத்தியுள்ளது.

பிசிஆர் பரிசோதனை செய்யாத எவரும் கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது எனச் சுகாதாரப் பகுதியினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இன்று இடம்பெறும் பிசிஆர் பரிசோதனையே முடக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான இறுதிப் பரிசோதனை ஆகும்.

எனவே, சுகாதாரப் பிரிவினர் வர்த்தக நிலையங்களுக்கு கள விஜயம் மேற்கொள்ளும் போது யாராவது பிசிஆர் செய்யாமல் வர்த்தக நிலையங்களில் பணி புரிந்தால் இதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரியப்படுத்தியுள்ளதாகவும் யாழ்.வணிகர் கழகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-03,18,33)


**வேலையாட்கள் தேவையா?**

உங்கள் நிறுவன Vacancy ( Office Works, Driver, Data Entry Operator ) களை நிரப்ப dewmasweb.com (6518)

**074 138 3368**

**பணியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் எமது புடவை நிறுவனத்திற்கு A/L படித்த புடவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ள ஆண் / பெண் ஊழியர்கள் தேவை. (6599)

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்**
இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.


# கொரோனா மரணங்கள் யாழில் அதிகரிப்பு

## பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு மக்களிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைந்த போதும் கடந்த சில தினங்களில் கொரோனா மரண எண்ணிக்கை அதிகரித்துள்ளமை கவலையளிப்பதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை ஊடகங்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன்போது மேலும் அவர் கூறுகையில், கடந்த சில மாதங்களில் யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்திருந்தது.

பின்னர் வேகம் குறைவடைந்து தொற்றாளர் எண்ணிக்கையும் குறைவடைந்தது. ஆனாலும் தற்போது கொரோனா தொற்றினால் உயிரிழப்போர் எண்ணிக்கை கடந்த 3 நாட்களில் உயர்ந்திருக்கின்றது.

மாவட்டத்தில் இதுவரை 14 பேர் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாக பின்பற்றுவதன் ஊடாக தொற்றிலிருந்து உங்களையும், உங்கள் சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். மேலும் மாவட்டத்தில் தற்போது 1784 நபர்கள் சுய தனிமைப்படுத்திலில் உள்ளனர்.

மாவட்டத்தை சேர்ந்த 600 பேர் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 500 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். மாவட்டத்தில் கட்டுப்பாடுகள் பகுதி பகுதியாக தளர்த்தப்படும் நிலையில் மக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என அவர் கேட்டுள்ளார். (ம-03)

## கேள்வி அறிவித்தல்
## பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை வேலைத்திட்டம் ( CBG ) 2021
## உள்ளூராட்சி திணைக்களம்
### கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1. கரைச்சி பிரதேச சபையின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி குறித்த வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி** சார்பாக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசியபோட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான சிடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. குறித்த பெறுகை 03/2020, 03/2020 (i) இலக்கங்களை உடைய 09.10.2020, 11.01.2021 ஆம் திகதிகளின் பொதுநிதி சுற்றுநிருபங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி: 021 228 5761, தொலைநகல்: 021 228 5690, E-Mail: kilinochchi1kps@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் **வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை 03.05.2021 ஆம் திகதி வரையான** காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி** எனும் இடத்திலிருந்து **19.04.2021 ஆம் திகதியிலிருந்து 03.05.2021 ஆம் திகதி வரை** அலுவலக நாட்களில் மட்டும் **காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும்** இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.2,000/= (வரிநீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், கரைச்சிபிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி** எனும் முகவரிக்கு **03.05.2021 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து **77 நாட்கள் (எழுபத்தேழு நாட்கள்) 19.07.2021** வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ)மில்லியன் (With out Vat) | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/KI/KAPS/CBG/01/2021 | ஜெயந்திநகர் ஆரோபணம் பின் வீதித் திருத்தம் | 6.41Mn | 90 நாட்கள் | C5,C6,C7 (ROAD WORKS) (Highway) | 70,000.00 | 16.08.2021 |

கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் **27.04.2021 திகதி காலை 10.30 மணிக்கு தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும்.** ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

தவிசாளர்
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

17.04.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை சீனாவின் காலனியாக மாற்ற அரசாங்கம் முயற்சி

## கோட்டாவிற்கு எதிராக கிளர்ந்தெழுந்த தேரர்

(கொழும்பு)

**இலங்கையின் தற்போதைய அரசாங்கம் நாட்டை சீனாவின் காலனியாக மாற்ற முயற்சிப்பதாகவும் அதற்கு எந்தவகையிலும் இடமளிக்கப் போவதில்லையெனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மிகவும் நெருக்கமான முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு நாரஹேன்பிட்டி அபயாராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது இறையாண்மைக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது மாத்திரமல்ல, எமது நாட்டை சீனாவின் காலனியாக மாற்ற முயற்சித்து வருகின்றனர்.

எமது நாட்டை சீனாவின் காலனியாக மாற்ற நாங்கள் தயாரில்லை. துறைமுக நகரம் உருவாகிய பின்னர், அது மேல் மாகாணத்திற்கே சவாலை எதிர்நோக்க நேரிடும். சீனாவுக்கு தேவையானவற்றையே செய்யத் தயாராகி வருகின்றனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டம், கொழும்பு மாநகர சபைக் கட்டளைச் சட்டம், இலங்கை வணிக நிலையங்கள் சட்டம், நகரம் மற்றும் கிராம உருவாக்கல் கட்டளைச் சட்டம், வழிமுறை அபிவிருத்திச் சட்டம், இலங்கை முதலீட்டுச் சபை சட்டம், பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டம், தேசிய வருமான வரிச் சட்டம் உட்பட 14 சட்டங்களில் இருந்து துறைமுக நகருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. அப்படியானால், இது சீனாவின் காலனியாக மாறும் என்பது தெளிவானது.

நாட்டு மக்கள் நாட்டை உருவாக்கவே ஆட்சியாளர்களை தெரிவு செய்தனரே அன்றி விற்பனை செய்வதற்காக அல்ல. நாட்டை குத்தகைக்கு விடவும் நாட்டுக்கு பாதிப்பான கொள்கைகளை உருவாக்க மக்கள் ஆட்சியாளர்களை தெரிவு



செய்யவில்லை.

நாங்கள் நாட்டை முன்னேற்ற ஆட்சியாளர்களை தெரிவு செய்தோம்.

திருட்டுத் தனமாகவும் இரகசியமாக உடன்படிக்கைகளை செய்ய எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லுங்கள் என தேரர் தெரிவித்தார். (நி-4)

# வடக்கு- கிழக்கில் 21-ம் திகதி வரை மழைக்கு வாய்ப்பு

## இடி, மின்னல் குறித்து அவதானம் என எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

தற்போது மேற்காவுகை மற்றும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கு கிடைத்து வரும் மழை எதிர்வரும் 21ஆம் திகதி வரை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

இடி -மின்னல் நிகழ்வுகளுடன் கூடிய இம்மழை சிறிது நேரமே நீடித்தாலும் செறிவாக கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இடி, மின்னல் காரணமாக தண்ணி முறிப்பு பகுதியில் மூவர் இறந்தமை மிகவும் கவலைக்குரிய நிகழ்வாகும் எனக் குறிப்பிட்ட அவர், கடந்த 2019ஆம் ஆண்டு இதேநாளில் யாழ்ப்பாணத்தில் மின்னல் தாக்கி மூவர் இறந்தமையையும் அவர் நினைவுகூர்ந்தார்.

பொதுவாக ஏப்ரல் மாதத்தில் மேற்காவுகை செயற்பாட்டினால் மழை கிடைக்கும் போது அது இடி-மின்னலுடன் கூடியதாகவே இருக்கும். எனவேமக்கள்இது தொடர்பாக மிகுந்த அவதானத்துடன் இருப்பது அவசியம்.

குறிப்பாக விவசாயிகள் இக்காலப் பகுதியில் சிறுபோக செய்கைக்காக வயல் வேலைகளில் மிகவும் அவதானத்துடன் ஈடுபடுவது அவசியம். எதிர்வரும் 23 ஆம் திகதி வரை வயல் வேலைகளை முடிந்த அளவுக்கு தவிர்ப்பது நன்மை பயக்கும் எனவும் பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

# சுகாதார வழிகாட்டல்களை மீறுவோரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

சுகாதார வழிகாட்டல்களை மீறுகின்றவர்களை கண்டுபிடிக்க விசேட நடமாடும் சேவையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்தச் சோதனை நடவடிக்கை வார இறுதி நாட்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக பொது மக்கள் கூடிய கரிசனை செலுத்த வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார். (நி-4)

# உணவுப் பாதுகாப்பு தொடர்பில் விரைவில் சட்டம்- திஸ்ஸ



(கொழும்பு)

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களில் உள்ளடங்கியிருக்கும் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் குறித்து விசாரணை செய்வதற்கான அதிகாரம் சுகாதார அமைச்சுக்கே இருப்பதாகவும், இதற்கமைய உணவுப் பொருட்களில் காணப்படும் தீங்கிழைக்கும் பதார்த்தங்கள் குறித்து விரிவான விசாரணைகளை நடத்துமாறும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியது.

உணவுகளைப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வு கூட வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், உணவுப் பாதுகாப்புத் தொடர்பான சட்டம் விரைவில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார். (நி-4)

# புலம்பெயர் தொழிலாளர்களை அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கையைச் சேர்ந்த 41 பெண் புலம்பெயர் தொழிலாளர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வருவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்து வரும் நிலையில், தற்போது அவர்களுக்கு உதவிதேவைப்படுகையில் அரசாங்கம் அதற்கு மாறாக செயற்படக் கூடாது என்றும் அச்சபை வலியுறுத்தியுள்ளது. (நி-4)

# மேலும் 303 பேர் குணமடைந்தனர்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 303 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.


இந்நிலையில், கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டோரின் மொத்த எண்ணிக்கை 92 ஆயிரத்து 611 ஆகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இதுவரை 95 ஆயிரத்து 949 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதுடன் இன்னும் இரண்டாயிரத்து 730 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 608 ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மான்ட்னார்லோ மாஸ்டர் டென்னிஸ்; 3-வது சுற்றில் ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வி



மான்ட்கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டி மொனாக்கோவில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன் தினம் நடந்த ஒற்றையர் 3 வது சுற்று ஆட்டம் ஒன்றில் நம்பர் வன் வீரரான நோவக் ஜோகோவிச் 4-6, 5-7 என்ற நேர்செட்டில் 33 ஆம் நிலை வீரரான இங்கிலாந்தின் டேனியல் இவான்சிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு வெளியேறினார்.

இதன் மூலம் இந்த ஆண் டில் தொடர்ச்சியாக 10 வெற்றிகளை பெற்று இருந்த ஜோகோவிச்சின் வீறு நடை முடிவுக்கு வந்தது.

இதேபோல் தரவரிசையில் 6வது இடத்தில் உள்ள ஜேர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் 4-6, 6-7(7-9) என்ற நேர் செட்டில் 15 ஆம் நிலை வீரரான டேவிட் கோபினிடம் வீழ்ந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 6-1, 6-1 என்ற நேர்செட்டில் டிமிட்ரோவை விரட்டினார். (4-6)




# ஸ்ரேயாஸ், அக்ஷருக்கு பதிலாக மாற்று வீரர்களை அறிவித்தது டில்லி






டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் கப்டன் ஸ்ரேயாஸ் அய்யர் தோள் பட்டையில் ஏற்பட்ட காயத்தால் ஐ.பி.எல். தொடங்குவதற்கு முன்பே விலகி விட்டார். அவருக்கு பதிலாக அனிருதா ஜோஷி டில்லி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கர்நாடகாவைச் சேர்ந்த அனிருதா ஜோஷி ஏற்கனவே ராஜஸ்தான் ரோயல்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகளில் இடம்பெற்றிருந்தாலும், ஐ.பி.எல்.இல் இன்னும் அறிமுகமாகவில்லை. மிடில் ஆர்டர் பட்ஸ்மேனாக அனிருதா ஜோஷி, ஆஃப் ஸ்பின்னும் வீசக்கூடியவர் ஆவார்.

கொரோனாவினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெறும் டில்லி அணியின் பிரதான சுழற்பந்து அக்ஷர் பட்டேலுக்கு பதிலாக குறுகிய கால ஒப்பந்தம் அடிப்படையில் மும்பையைச் சேர்ந்த சுழற்பந்து வீசும் ஒல்ரவுண்டர் ஷம்ஸ் முலானி சேர்க்கப்பட்டுள்ளார். அக்ஷர் பட்டேல் குணமடைந்து அணியில் மீண்டும் இணையும் வரை ஷம்ஸ் முலானி நீடிப்பார். (4-6)

# நிலைமையைப் புரிந்து விளையாடவில்லை-வோர்னர்




ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சேப்பாக்கத்தில் நேற்று 16 ஆம் திகதி இரவு நடந்த லீக் ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 6 ரன் வித்தியாசத்தில் ஐதராபாத் சன்ரைசர்சை வீழ்த்தி 2-வது வெற்றியை ருசித்தது.

தோல்வி குறித்து ஐதராபாத் கப்டன் வோர்னர் கூறுகையில், 'இந்த தோல்வியை ஜீரணிக்க முடியவில்லை. மிடில் ஓவர்களில் இருந்து நாங்கள் விளையாடிய விதம் ஏமாற்றம் அளித்தது.

இடக்கை சுழற்பந்து வீச்சை மடக்கி அடித்து ஆடுகையில் நினைத்த மாதிரி பந்து செல்லவில்லை. நிலைமையை புரிந்து கொண்டு அதற்கு தகுந்த மாதிரி நிதானமாக எங்களது நிலைத்து நின்று ஆடக்கூடிய இரு பட்ஸ்மேன்களில் ஒருவர் கடைசிவரை களத்தில் நின்றிருக்க வேண்டும்.

இந்த மைதானத்தில் இன்னும் எங்களுக்கு 3 ஆட்டங்கள் இருக்கிறது. இங்கு எப்படி ஆடுவது என்பதை அறிந்து அதற்கு தகுந்தபடி நாங்கள் செயற்பட வேண்டியது அவசியமாகும்' என்றார்.

# இந்திய கிரிக்கெட் வீரர்கள் ஒப்பந்த பட்டியலில் புவிக்கு பின்னடைவு பாண்டியா முன்னேற்றம்



இந்திய கிரிக்கெட் வாரியம் சார்பில் ஏ பிளஸ், ஏ,பி,சி என்று 4 வகையாக கிரிக்கெட் வீரர்கள் தரம் பிரிக்கப்பட்டு ரூ.7 கோடி, ரூ.5 கோடி, ரூ.3 கோடி, ரூ.ஒரு கோடி வீதம் ஆண்டுதோறும் ஊதியம் வழங்கப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரையிலான வீரர்களின் புதிய ஒப்பந்த பட்டியலை இந்திய கிரிக்கெட் வாரியம் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதன்படி கப்டன் விராட் கோலி, துணை கப்டன் ரோகித் சர்மா, ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் மாற்றமின்றி ஆண்டுக்கு ரூ.7 கோடியை ஊதியமாக பெறும் 'ஏ பிளஸ்' பிரிவில் நீடிக்கிறார்கள்.

'ஏ' பிரிவில் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, புஜாரா, அஜிங்யா ரஹானே, ஷிகர் தவான், லோகேஷ் ராகுல், முகமது ஷமி, இஷாந்த் ஷர்மா, ரிஷப் பண்ட், ஹர்திக் பாண்ட்யா, 'பி' பிரிவில் விருத்திமான் சஹா, உமேஷ் யாதவ், புவனேஷ்வர் குமார், ஷர்துல் தாகூர், மயங்க் அகர்வால், 'சி பிரிவில் குல்தீப் யாதவ், நவ்தீப் சைனி, தீபக் சாஹர், சுப்மான் கில், ஹனுமா விஹாரி, அக்ஷர் பட்டேல், ஸ்ரேயாஸ் அய்யர், வாஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சாஹல், முகமது சிராஜ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

காயத்தால் கடந்த ஆண்டு நிறையப் போட்டிகளை தவறவிட்ட வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார் ஏ இல் இருந்து தரம் இறக்கப்பட்டு பி பிரிவுக்கு மாற்றப்பட்டு உள்ளார்.

ஒல்ரவுண்டர் ஹர்திக் பாண்டியா பி இல் இருந்து ஏ பிரிவுக்கு முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலிய தொடரில் கலக்கிய தமிழக இடக்கை வேகப்பந்து வீச்சாளர் டி.நடராஜனுக்கு ஒப்பந்த பட்டியலில் இடம் கிடைக்கவில்லை. கேதர் ஜாதவ், மனிஷ் பாண்டே பட்டியலில் இருந்து விடப்பட்டுள்ளனர். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாடு உருப்பட வேண்டுமானால் தேரர்கள் அரசியலில் தலையிடுவதை தவிர்க்க வேண்டும்

மனோ கணேசன்

(கொழும்பு)

**பௌத்த அமைப்புகளை அரசாங்கம் தடை செய்யப் போகிறது என்ற புரளியை கிளப்பி மக்களின் கவனத்தை திசை திருப்ப சில பௌத்த கடும்போக்குவாத தேரர்கள் முயன்று வருவதாக தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**



இந்த அரசு தமது பௌத்த அமைப்புகளை தடை செய்யப் போகிறது என்ற புரளியை கிளப்பி மக்களின் கவனத்தை திசை திருப்புகிறார்கள் எனவும் சமூக ஊடகத்தில் நேற்று இட்டுள்ள பதிவில் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் இந்நாடு உருப்பட வேண்டுமானால், பௌத்த தேரர்கள் அரசியலில் தலையிடுவதை தடை செய்யத் தான் வேண்டும்.

சில முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது உயிர்த்த ஞாயிறு குண்டு தொடர்பில் குற்றம் சாட்டப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், அதற்கான சாட்சியம் இல்லை. அப்படி சாட்சியங்கள் இருந்தால் இந்த அரசே சும்மா விடாது. தேரர்களிடம் சாட்சியம் இருந்தால் அதை விசாரணை கமிசனிடம் அவர்கள் தர வேண்டும். ஆனால், அப்படி இவர்களிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை.

தமிழ், முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம் மட்டுமே இருக்கிறது. தமிழ், முஸ்லிம் அடிப்படைவாதம் பற்றி பேசும் இவர்கள் தமது அடிப்படைவாத, இனவாதத்தை தேசபக்தியாக காட்டுகிறார்கள்.

ஆகவே இன்று, அரசின் பிரதான கட்சியில் உள்ள தீவிரவாதிகளையும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட நபர்களையும் கொண்டு, எதிரணியிலும் சிங்கள பௌத்த தீவிரர்கள் கிடைத்தால், அவர்களையும் சேர்த்து, இந்த அரசின் மீதான சிங்கள மக்களின் அதிருப்தியை திசை திருப்பி, மீண்டும் ஒருமுறை சிங்கள பௌத்த அரசு ஒன்றை அமைக்க முயல்கிறார்கள்.

இனிவரும் மாற்று அரசு, ஒரு சிங்கள பௌத்த அரசாக இருப்பதை நாம் ஏற்க முடியாது. உலகமும் ஏற்காது. அது ஒரு இலங்கை அரசாக மட்டுமே இருக்க முடியும்.

இல்லாவிட்டால் அடுத்த இரண்டு வருடத்தில், இலங்கை நாடு அரசியல், சமூக, பொருளாதார துறைகளில் தோற்றுப்போன நாடாக உலகில் ஒதுக்கப்படும். அதன்பிறகு சாம்பலில் இருந்து எழுந்து வர வேண்டியதுதான் எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# மதுபோதையில் சாரத்தியம் 783 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 783 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சித்திரை புத்தாண்டு தினத்தன்று காலை 9 மணிமுதல் நேற்றுக் காலை 6 மணிவரையில் இந்த விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது வேறு போக்குவரத்து குற்றங்கள் தொடர்பில் 2,844 சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அதேநேரம் 534 உந்துருளிகள், 43 சிற்றூர்ந்துகள், 180 முச்சக்கரவண்டிகள், 2 பேருந்துகள் என்பன பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (நி-4)

## புத்தாண்டு காலப்பகுதியில்

# அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் 7.5 கோடி ரூபாய் வருமானம்

(கொழும்பு)

புத்தாண்டு காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணித்த வாகனங்கள் மூலம் சுமார் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் 14 ஆம் மற்றும் 15 ஆம் திகதிகளில் குறித்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவின் பதில் முகாமையாளர் நிஹால் லொட்ரிக் தெரிவித்துள்ளார்.

இக்காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகளில் 263,025 வாகனங்கள் பயணித்துள்ளன.

நேற்று முன்தினம் மாத்திரம் 112,303 வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணித்துள்ளன.

இதன்மூலம் 3 கோடியே 36 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவின் பதில் முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# வாகன விபத்துக்களை தடுப்பதில் எமது மக்கள் அவதானம் செலுத்த வேண்டும்

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்களை தடுப்பது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு போக்குவரத்து அமைச்சு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையில் வருடாந்தம் மூவாயிரத்துக்கும் அதிகமான விபத்துகள் இடம்பெறுகின்றன. 2018 ஆம் ஆண்டில் வாகன விபத்துக்களின் மூலம் 3,154 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 2019 ஆம் ஆண்டில் 2,852 பேரும் 2020 ஆம் ஆண்டு ஆறு மாத காலத்தினுள் 1242 பேரும் வாகன விபத்துக்களினால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த காலங்களில் நாளாந்தம் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் மூலம் எட்டுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலானவர்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால் அது தற்போது இத்தொகை 11 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், 2018 ஆம் ஆண்டு வாகன விபத்துக்களின் மூலம் அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை 9,391 ஆகும். 2019 ஆம் ஆண்டளவில் அது 11 ஆயிரம் வரை உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று வீதத்திற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 201.28 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று வீதத்திற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 195.72 ரூபாவாக பதிவாகியுள்ளது. (நி-4)

# துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் ஊழல் மோசடிகளுக்கு வழிவகுக்கும்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்தின் விளைவாக ஊழல் மோசடிகள் இடம்பெறக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டு, அதற்கு எதிராக ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

மேற்படி சட்டமூலத்தின் கூறுகள், அரசியலமைப்பின் முக்கிய சரத்துக்களை மீறும் வகையில் அமைந்திருப்பதாகவும் அவை நிதிப்பாய்ச்சல்களை இலகுவாக்குவதன் விளைவாக நிதிமோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதாகவும் ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை துறைமுக நகரத்தில் அமைக்கப்படவுள்ள வணிக, வர்த்தகக் கட்டமைப்புக்களின் உரிமையாளர்கள் யார் என்பது தொடர்பில் போதிய வெளிப்படைத்தன்மை பேணப்படவில்லை என்றும் அத்தகைய தகவல்களைப் பெறக்கூடியதாக இருப்பது ஊழல் மோசடிகள் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகும் என்றும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் துறைமுக நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள வங்கிகளின் நடவடிக்கைகளில் போதிய வெளிப்படைத்தன்மை பேணப்படாமையானது, நாட்டின் ஏனைய வங்கிகள் மீது பிரயோகிக்கப்படும் சட்டங்களிலிருந்து விலகிச்செயற்படுவதற்கு அவற்றுக்கு இடமளிக்கும் என்றும் அது நாட்டில் இரகசிய அதிகார வரம்பு ஒன்றை உருவாக்கும் என்றும் ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சட்டவிரோத மதுபானம் அருந்திய இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் - படிகாரமடுவ பகுதியில் சட்டவிரோத மதுபானம் அருந்திய இருவர் உயிரிழந்துள்ளனர்.

நண்பர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வில் இவர்கள் சட்டவிரோத மதுபானம் அருந்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து மூவர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

# இந்த வருடம் மின்னல் தாக்கி 8 பேர் பலி

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மின்னல் தாக்கத்தினால் 8 பேர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஆயகலை" சஞ்சிகை வெளிவந்துவிட்டது

(யாழ்ப்பாணம்)

குரலோசை - நுண்கலைகளின் தாயகத்தின் வெளியீடான "ஆயகலை" எனும் சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது. தவத்திரு யோக சுவாமிகள் சிறப்பிதழாக வெளிவந்திருக்கும் இச்சஞ்சிகையில் இசை, நடன, நாடகத்துறை சார்ந்த எழுத்தாளர்களின் கட்டுரைகளும் சமகாலக் கலைத்துறை சார்ந்த செய்திகளும் வெளிவந்துள்ளன. (5)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

உரும்பிராய் தெற்கு செல்வபுரம் உதயசூரியன் முன்பள்ளியின் 20 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை மேற்படி பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறும்.

குறித்த இரத்ததான முகாமில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

• • • • • • • • • • • • • • •

(குப்பிழான்)

சித்தன்கேணி கலைவாணி சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கலைவாணி வீதி, சித்தன்கேணியில் அமைந்துள்ள மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் குருதிக் கொடை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-18)

# மின்னல் தாக்கி உயிரிழந்தவர்கள்
## பரிசோதனையின் பின் ஒப்படைக்க நடவடிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு 03 ஆம் கண்டம் வயல் வெளிப் பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயிகள் மூவர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வேளை முல்லைத்தீவின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்து வந்துள்ளது. இந்நிலையில் தண்ணிமுறிப்பு 3 ஆம் கண்டம் வயல்வெளிப் பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயிகள் மூவர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

குமுழமுனை மேற்கு 7 ஆம் வட்டாரத்தினை சேர்ந்த 36 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை மயூரன் குமுழமுனை கிழக்கினை சேர்ந்த 31 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான வன்னியசிங்கம் யுகந்தன், வற்றாப்பளை கேப்பாபுலவு கிராமத்தினைச் சேர்ந்த 43 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான யோகலிங்கம் சுஜீபாகரன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இடிமின்னல் தாக்கத்தின் போது வயல் கொட்டிலில் நின்ற வேளை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த தடயவியல் பொலிஸார் சட்டவைத்திய அதிகாரிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா ஆகியோர் முன்னிலையாகி விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டு பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.(5-4-281)

# சந்திரபுரம் மக்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மட்டுவில்-சந்திரபுரம் கிராம மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் கு.குகானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சந்திரபுரம் கிராமத்திற்கு குடிநீரை வழங்குவதற்கான முயற்சிகளை சாவகச்சேரி பிரதேசசபை முன்னெடுக்க வேண்டும்.

இது தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்து குடிநீரை சுத்திகரித்து வழங்குவதற்கான இயந்திரங்களைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (5-4-30)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 2010 கல்வியாண்டு (ஹாட்லீஸ் 2010) மாணவர்களின் ஏற்பாட்டில் வசீகரன், பிரதீபன் ஆகியோர் ஞாபகார்த்த இரத்ததான முகாம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாடசாலை மாநாட்டு மண்டபத்தில் அதிபர் த.கலைச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்:- மகாலிங்கம்)

## கும்பாபிஷேக தின அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு வழியிற் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக தின அபிஷேகம் நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெறவுள்ளது. ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகை தருமாறு ஆலய பரிபாலன சபை கேட்டுக்கொண்டுள்ளனர். (5-4)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் இடம்பெறவுள்ள இவ் ஆலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி திங்கட்கிழமை 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (5-6)

• • • • • • • • • • • • • • •

(குப்பிழான்)

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ளது.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் தேர்த் திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் தீர்த்த உற்சவமும் அன்றைய தினம் இரவு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-5-18)

# யாசகம் செய்பவரை மோதிவிட்டு மோ.சைக்கிளில் தப்பியோட்டம்

(குருமன்காடு)

வவுனியா புகையிரத நிலைய வீதியில் யாசகம் செய்பவரை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மோதித்தள்ளிவிட்டு அவ்விடத்திலிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதில் படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இவ்விபத்துச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,



வவுனியா, புகையிரத நிலைய வீதியில் உள்ள தனியார் வங்கிக்கு முன்பாக வீதியோரத்தில் முதியவர் ஒருவர் யாசகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். குறித்த வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் வீதியோரமாக யாசகத்தில் ஈடுபட்ட நபரை மோதித்தள்ளிவிட்டு அவ்விடத்திலிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

குறித்த முதியவர் தலையில் பலத்த காயத்துடன் வீதியில் கிடந்துள்ளார். இதனை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாரின் உதவியுடன் 1990 அவசர நோயாளர் காவு வண்டி சேவையூடாக அவரை வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இது தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-250)

# சனசமூக நிலையத்தினர்
## முன்மாதிரியாக செயற்பட வேண்டும்

(சாவகச்சேரி)

சனசமூக நிலையங்கள் சமூகத்திற்கு முன்மாதிரியான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.தர்சன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற விசேட அமர்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


சனசமூக நிலையங்கள் முன்மாதிரியாக செயற்படும் பட்சத்தில் சமூகத்தில் இருக்கும் இளைஞர்களை நன்னடத்தை உள்ளவர்களாக வளர்க்க முடியும். சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தினர் பல முன்மாதிரியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக நகர சபையின் பணிகளை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். கிராம இளைஞர்கள் இணைந்து சனசமூக நிலையம் ஊடாக சிரமதானம், பொதுக் கிணறுகளை துப்புரவு செய்தல் உள்ளிட்ட பல செயற்பாடுகளை வாரம் தோறும் ஞாயிறு தினங்களில் முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளை ஏனைய சனசமூக நிலையங்களும் முன்னெடுத்து சமூகத்திற்கு முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (5-4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகல் கனவு காணுகிறார் சஜித்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசு கவிழும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பகல் கனவு காணக்கூடாது. இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் கல்வி அமைச்சருமான பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின பங்காளிக்கட்சிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள கூட்டத்துடன் அரசு கூட்டணி பிளவுப்படும் என சஜித் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இக் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார். (நி-4)

# அதிகரிக்கும் வாகன விபத்துக்கள்; 48 மணித்தியாலத்தில் 30 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 48 மணித்தியாலங்களில் வாகன விபத்துக்களால் 30 பேர் மரணித் துள்ளனர்.

அத்துடன் குறித்த காலப்பகுதியில் வாகன விபத்துக்களால் சுமார் 150 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவி த்தார். உயிரிழந்தவர்களில் 12 பேர் உந்துருளி செலுத்து நர்கள் என அவர் குறிப்பிட்டார். (நி-4)

# சீனத் தடுப்பூசி

# பக்க விளைவு ஏற்பட்டால்

# ஆய்வுக் குழுவே பொறுப்பு

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிகளின் வினைத்திறன் ஆய்வு மட்டத்திலேயே காணப்படுகின்ற நிலையில் அதனை நாட்டு மக்களுக்கு வழங்குவதால் ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்படுமாயின் அதற்கு கொவிட் தடுப்பூசி தொடர்பில் ஆராயும் குழுவே பொறுப்பேற்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சினோபார்ம் தடுப்பூசிகள் ஆரம்பத்தில் இலங்கையிலுள்ள சீனப் பிரஜைகளுக்கு மாத்திரமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் தற்போது இலங்கை பிரஜைகளுக்கும் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றமை தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிலைப்பாட்டை வினவிய போது, அதன் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரத்ன சிங்கம் இதனைத் தெரிவித்தார்.

சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிகளை இலங்கை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் அதன் வினைத்திறன் எவ்வாறானதாக அமையும் என்பது இன்னும் ஆய்வு மட்டத்திலேயே காணப்படுகிறது.

ஆரம்பத்தில் இந்த தடுப்பூசிகள் இலங்கையிலுள்ள சீன பிரஜைகளுக்கு மாத்திரமே வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது. ஆனால் தற்போது 1000 இலங்கை பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த தடுப்பூசியின் வினைத்திறன் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுத்து அதன் உண்மை தன்மை குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 37 ½ செவ்.சூரி 11 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: HND,BSC,QS சிங்கப்பூர்) தொழில்- திட்டமுகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: ஆங்கிலத்தில் பணிபுரியக்கூடிய பட்டதாரி. அவுஸ்திரேலியா. கனடா. லண்டன். உள்நாடும்<br>தொ.இ: B/11782 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 44 செவ்.சூரி 3 இல்<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்:. B.Com<br>எதிர்பார்ப்பு: உள்நாடு. வெளிநாடு<br>தொ.இ: G/3732 |
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 74 செவ் 1 சூரி 12 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC, Senior Imple ntation Eng(Australia)<br>எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகம் பார்க்கும் பெண். வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11785 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 52 செவ் 5 சூரி 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு வரன் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/3762 |
| பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 22 ½ செவ் 10 சூரி 9 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L டெங்கு ஒழிப்பு உத்தியோகத்தர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: நல்ல குணமுடைய பெண். உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11789 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 17 ½ செவ் 4 சூரி 12 இல்<br>தகைமை/தொழில்: A/L Maths<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம். வெளிநாடு<br>தொ.இ: G/3771 |
| பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 60 ½ செவ் 8 சூரி 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: V.T.A போதனா ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச.தனியார் தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11790 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 29 ¼ செவ் 1 சூரி 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: வைத்தியர். பொறியியலாளர். சட்டத்தரணி<br>தொ.இ: G/3815 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# மருமகனை பொல்லால் தாக்கி கொலை செய்த மாமனார்

(கொத்மலை)

கொத்மலை வெதமுல்ல தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்த்தர்க்கம் முற்றியதில் மாமனார் மருமகனை அருகில் இருந்த பொல்லால் தாக்கியுள்ளார். இதன்போது காயமடைந்த மருமகன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-4)

# புத்தாண்டு விடுமுறையை கழித்துவிட்டு வீடு திரும்பும்போது நடந்த விபரீதம்

(பதுளை)

பதுளை - ஹல்துமுல்ல , வெலி ஓயாவில் மூழ்கி காணாமல் போயிருந்த தந்தை மற்றும் மகனது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹல்தமுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிஓயாவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை நீராடிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் நீரில் இழுத்து செல்லப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

கொழும்பு - மஹரகம பகுதியைச் சேர்ந்த நான்கு பேரைக் கொண்ட குடும்பத்தினர். சித்திரை புத்தாண்டு விடுமுறை தினத்தை முன்னிட்டு பதுளை பகுதிக்கு சுற்றுலா சென்றுள்ளதுடன். மீண்டும் கொழும்புக்கு வந்து கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தன.

இந்நிலையில், வெலி ஓயாவில் இவர்கள் நீராடிக் கொண்டிருக்கும் போது திடீரென நீரின் வேகம் அதிகரித்துள்ளது. பின்னர் நால்வரும் நீரில் மூழ்கியுள்ளதுடன் இருவரை அங்கிருந்த இளைஞர்கள் சிலர் காப்பாற்றியுள்ளனர். எனினும் தந்தையும் மகனும் நீரில் இழுத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

அதற்கமைய , அவர்களை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. நேற்று முன்தினம் மாலையே தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் நேற்று வெள்ளிக்கிழமையே அவர்களிருவரதும் சடலங்களும் மீட்கப்பட்டிருந்தன.

சம்பவத்தில் 52 வயதுடைய தந்தையும், அவருடைய 17 வயதுடைய மகனுமே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹல்தமுல்ல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர்மலையில் இந்துக்கள் வழிபட

# முழு உரித்தையும் பெற்றுக் கொடுப்போம்



## சுமந்திரன் உறுதி

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு - தண்ணிமுறிப்புப் பகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக வழிபாட்டுத்தலமான குருந்தூர்மலையில், இந்து மக்கள் வழிபடுவதற்கான முழு உரித்தையும் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

குருந்தூர்மலையில் தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் வழக்கொன்றினைத் தொடர்வது தொடர்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கடந்த 30.01.2021 அன்று பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் அன்று வழக்குத் தொடர்வதற்கான ஆவணங்கள் சிலவற்றினைக் கையளித்தனர்.

இந்நிலையில் இதன் தொடர்ச்சியாக நேற்று முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்து வழக்குத் தொடர்வது தொடர்பான முக்கிய ஆவணங்கள் சிலவற்றினை கையளித்தனர்.

இச்சந்திப்பினையடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை சம்பந்தமாக சில வருடங்களுக்கு முன்பு ஒரு பிணக்கு ஏற்பட்டது. அது தொடர்பாக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு அதிலே ஒரு இணக்கப்பாடு எய்தப்பட்டது.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தொல்லியல் திணைக்களத்தினர், அமைச்சரோடு வந்து அங்கே இருந்த வழிபாட்டுச்சின்னத்தை அகற்றி ஒரு புத்தர் சிலையை வைத்து புதிதாக தொல்பொருள் ஆராய்ச்சி என்று ஆரம்பித்தனர்.

ஆகையினாலே இது தொடர்பாக வழக்கு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்காக கடந்த 2018 ஆம் அண்டு தாக்கல் செய்யப்பட்ட AR/673/18 என்ற வழக்கின் ஆவணப் பிரதியை முழுமையாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா 'ரவிகரன் என்னிடம் கையளித்தார்.

அந்த வகையில் இது தொடர்பான அடுத்தடுத்த நடவடிக்கைகள், அதாவது அந்த இடத்திலே இந்து மக்கள் சென்று வழிபடுவதற்கான முழு உரித்தையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையினை நாங்கள் மேற்கொள்வோம் என்றார். (5-4)

# இயக்கமின்றி காணப்படும் ஆரம்ப சுகாதார நிலையம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காததன் காரணமாக புத்துவெட்டுவான் கர்ப்பவதிப் பெண்கள் ஐயன்கன்குளம் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

2017ஆம் ஆண்டு 10 இலட்சம் ரூபா நிதியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் மேலும் 5 இலட்சம் ரூபாய் நிதியில் கட்டடப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

கட்டட வேலைகள் நிறைவடைந்த நிலையிலும் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காததன் காரணமாக ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஐயன் கன்குளம் வைத்தியசாலையில் நடைபெறுகின்ற கர்ப்பவதிகள் சிகிச்சை நிலையத்திற்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆரம்ப சுகாதார நிலையம் புத்துவெட்டுவான் மக்களின் நலனுக்காக அமைக்கப்பட்டாலும் கட்ட வேலைகள் நிறைவு பெற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காத நிலையிலேயே காணப்படுகின்றது.

புத்துவெட்டுவான் கிராமத்தில் 85 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன.

இக்கிராமத்திற்கான பேருந்து சேவை நடைபெறுவதில்லை. இதன் காரணமாக மாதாந்த சிகிச்சைக்குச் செல்கின்ற பெண்கள் ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஐயன் கன்குளம் வைத்தியசாலைக்கு போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆரம்ப சுகாதார நிலையத்தினை இயங்க வைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புத்துவெட்டுவான் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-350)



வவுனியா, வைரவ புளியங்குள ஆதிவிநாயகர் திருக்கோவில் தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

(படம்:-வசந்தரூபன்)

# இறங்கு துறையை புனரமைக்க 300 மில்லியன் நிதி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைதீவு பகுதியில் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்ற இரணைதீவு இறங்குதுறை புனரமைப்பதற்கு சுமார் 300 மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைதீவு பகுதியில் சுமார் இருபது வருடங்களுக்குப் பின்னர் மக்கள் மீள்குடியேறி தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு மீள் குடியேறிய கடற்றொழிலாளர்கள் பெருமளவு முதலீடுகளைச் செய்து கடல் அட்டை வளர்ப்பு மீன்பிடி என பல்வேறுபட்ட தொழில் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். கடந்த ஆண்டில் புனரமைக்கப்பட்ட இறங்கு துறையானது புரேவி புயல் காரணமாக சேதமடைந்து காணப்படுகிறது.

எனவே இதனை புனரமைத்துத்தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது இதனை புனரமைப்பதற்கு சுமார் 300 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி தேவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரணைதீவுப்பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய உட்கட்டுமான வேலைகள், வீதி புனரமைப்பு மற்றும் குடிநீர் வசதியை ஏற்படுத்துதல், போக்குவரத்து வசதியை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கடந்த 31 ஆம் திகதி பிரதேச செயலாளர் மற்றும் வடக்கு மாகாண திணைக்களத்தின் துறைசார் அதிகாரிகள் மதிப்பீடுகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

# பாவனையற்ற மலசலகூடங்கள் பொதுப்பயன்பாட்டிற்கு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளத்தில் உள்ள மலசலகூடங்களை பொதுப் பயன்பாட்டிற்கு மாற்றுவதில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

மாங்குளம் சந்தைப் பகுதியில் உள்ள பொது மலசலகூடங்களை மாங்குளம் நகரத்திற்கான பொது மலசலகூடங்களாக மாற்றுவது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை அமர்வுகளில் பிரேரணைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. பதினைந்து நாட்களுக்குள் குறித்த மலசலகூடங்களை மாங்குளம் நகரத்திற்கான பொது மலசலகூடங்களாக மாற்றுவது எனவும் பிரதேச சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆனால் ஒரு மாதம் கடந்தும் மாங்குளம் நகரத்திற்கான பொது மலசலகூடங்களாக மாற்றுகின்ற நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள பேருந்து நிலையம் கால்நடைகளின் உறைவிடமாகவும் புதிய மலசலகூடங்கள் பாவனைகளற்ற நிலையில் சேதமடைந்தும் வருகின்றன.

பெருமளவு நிதியில் அமைக்கப்பட்ட இம்மலசலகூடங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

17.04.2021
சித்திரை, சனிக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 5.56 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 11.55 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
சந்திராஷ்டமம்-அனுசம், விசாகம் வளவன்


மேஷம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.


ரிஷபம்

தொலைபேசி வழித்தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுபகாரியப் போச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், போசன சுகமுண்டு.


மிதுனம்

ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயமாகலாம், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.


கடகம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.


சிம்மம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


கன்னி

கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், கௌரவமான நாள்.


துலாம்

உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம்.


விருச்சிகம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


தனுசு

குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, கௌரவமான நாள்.


மகரம்

சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.


கும்பம்

சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கலாம்.


மீனம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அக்கறை கூடும்.

பிறரை மன்னிப்பவனைக் கடவுள் மன்னிக்கிறார்

# தடை செய்யப்பட்ட அமைப்புகளை சேர்ந்தோர்

## பள்ளிப் பதவிகளில் இருந்தால் உடனடியாக விலகவும்

(கொழும்பு)

**இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தோர் பள்ளிவாசல் பதவிகளில் இருந்தால் உடனடியாக விலகுமாறு வக்பு சபை அறிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் நடைபெற்ற வக்பு சபை கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என முஸ்லிம் மத விவகாரங்கள் துறை இயக்குநர் ஏ.பி.எம். அஷ்ரப் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தீவிரவாதத்துடன் தொடர்புடைய 11 இஸ்லாமிய அமைப்புகளைத் தடை செய்து விசேட வர்த்தமானியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டிருந்தார்.

அதன்படி ஐக்கிய தௌஹீத் ஜமாஅத், சிலோன் தௌஹீத் இமாஅத், ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத், அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத், ஜம்இய்யதுல் அன்சாரி சுன்னத்துல் மொஹம்மதியா, தாருல் அதர் அல்லது ஜாமிஉல் அதர், ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம், ஐ.எஸ்.ஐ.எஸ்., அல் கொய்தா, சேவ் த பேர்ல்ஸ், சுபர் முஸ்லிம் ஆகிய அமைப்புகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வர்த்தமானி அறிவிப்பின்படி தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கு தலைமைத்துவம் வழங்குவது, உறுப்பினராக இருப்பது, அமைப்புடன் தொடர்புடைய உடை - சின்னங்களை அணிவது, கூட்டங்களை நடத்துவது, ஊக்குவிப்பது, தகவல்களை வெளியிடுவது போன்ற நடவடிக்கைகள் தண்டனைக்குரிய குற்றமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே வக்பு சபை மேற்படி அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது. (நி-4)

# மைத்திரியுடன் மீண்டும் கைகோர்க்கும் திஸாநாயக்க ?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது இருவரும் மனம் விட்டு பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

எஸ்.பி.திஸாநாயக்க, நல்லாட்சியின்போது மைத்திரிபால சிறிசேனவின் விசுவாசியாகவே செயற்பட்டார். இதனால்தான் பொதுத்தேர்தலில் தோல்வியுற்றிருந்தாலும் தேசியப் பட்டியல் ஊடாக எஸ்.பிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு அமைச்சுப் பதவியையும் மைத்திரி வழங்கினார்.

எனினும் மைத்திரிபாலவுக்கு நெருக்கடி ஏற்பட்டு ராஜபக்ஷ அலை மீண்டும் உருவானபோது, மைத்திரியை கைவிட்டு ராஜபக்ஷக்களுடன் எஸ்.பி சங்கமித்தார். இதனால் சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் நீக்கப்பட்டார்.

2020இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் "மொட்டு" கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தாலும் எஸ்.பிக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகூட வழங்கப்படவில்லை. அரசியலில் நெடுநாள் அனுபவம் கொண்ட பல அமைச்சுப் பதவிகளை வகித்த எஸ்.பிக்கு மாவட்ட தலைவர் பதவி மட்டும் வழங்கப்பட்டமை பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

அதேபோல் அண்மைக்காலமாக அரசின் செயற்பாடுகளையும் அவர் விமர்சித்து வருகின்றார். எனவே, விரைவில் அவர் சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணையக்கூடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. எஸ்.பியுடன் செல்வதற்கு சில மாகாண சபை உறுப்பினர்களும் தயார் நிலையில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

## பள்ளத்தில் பாய்ந்த வான்; ஒருவர் பலி, 13 பேர் காயம்

(பதுளை)

பதுளை-கந்தகெட்டிய-போபிட்டிய பகுதியில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 13 பேர் காய மடைந்துள்ளனர்.

வான் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்தமை காரணமாகவே நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த 13 பேரில் ஐந்து சிறுவர்கள் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## கல்கிஸை கடற்கரையில் கரையொதுங்கிய டொல்பின்



(கொழும்பு)

கல்கிஸை வெடிகந்த கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு பாரிய டொல்பின் மீன் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

20 அடி நீளமான இந்த மீனின் தலை மற்றும் செட்டைகள் சிதைவடைந்துள்ளன.

இந்த மீன் சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்து பின்னர் கரையொதுங்கியிருக்கலாம் என அப்பிரதேசத்துக்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (நி-4)

# தென்னையிலிருந்து சடலம் மீட்பு

(களுவாஞ்சிக்குடி)

களுவாஞ்சிக்குடி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட தோட்ட காணியொன்றில் தென்னை மரத்திலிருந்து ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தென்னம் புதநீர் இறக்குவதற்காக தென்னை மரத்தில் ஏறிய நபரை மிக நீண்ட நேரமாகியும் காணவில்லையென தேடியபோது, தென்னை மரத்தின் வட்டிற்குள் மூச்சுப் பேச்சு அற்ற நிலையில் இருந்ததைக் கண்டதனைத் தொடர்ந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது குறித்த நபர் இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## பேராசை பெரும் நட்டம்



"ஆ! ஏராளமான செல்வம் கிடைத்துவிட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ்செல்வன் நான் தான்" என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் அமர்ந்தான்.

"ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே... அவர்கள் இந்த நகைகளையும் பொற்காசுகளையும் கைப்பற்றிக் கொள்வார்களே! என்ன செய்வது?" என்று சிந்தித்தான்.

நல்ல வழிஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடம் இருந்த இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான்.

"உனக்கு என்ன வேண்டும்?"" என்று உள்ளிருந்து குரல் கேட்டது. "வண்டியில் இருக்கும் நகைகளும் பொற்காசுகளும் என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக் கூடாது."" என்று கேட்டான்.

"அப்படியே ஆகட்டும்." என்று குரல் வந்தது. வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும் பொற்காசுகளும் தெரியவில்லை. தன் அறிவுக் கூர்மையை மெச்சிக் கொண்டான் பேராசைக்காரன். மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்தான்.

வீட்டுக்குள் ஓடினான். "இனி நாமோ நம் பரம்பரையோ வறுமையில் வாட வேண்டாம். அரசனைப் போல செல்வச் செழிப்புடன் வாழலாம். வண்டியில் விலை உயர்ந்த பொருட்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளேன் பார்!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.

வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். "என்னங்க! வண்டியில் விலை உயர்ந்த பொருட்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். எந்தப் பொருளும் இல்லையே."என்றாள்.

அவன் கண்களுக்கு வண்டியில் ஏராளமான பொற்காசுகளும் நகைகளும் இருப்பது தெரிந்தது. மனைவியைப் பார்த்து, "வண்டியை நன்றாகப் பார்," என்றான். நன்றாகப் பார்த்து விட்டுத் தான் சொல்கிறேன் என்றாள்.

அப்பொழுதுதான் அவனுக்குத் தான் கேட்ட இரண்டாம் வரம் எவ்வளவு தவறானது என்று புரிந்தது. தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். கிடைத்த விலை மதிப்பற்ற பொருட்களைப் பயன்படுத்த முடியாத நிலையை எண்ணி வருத்தம் அடைந்த அவன் வண்டியை ஓட்டிக் கொண்டு மீண்டும் காட்டிற்குச் சென்றான்.

அந்த இடத்தில் மந்திரக் கிணறும் இல்லை. ஒன்றும் இல்லை. பைத்தியம் பிடித்தவனைப் போல் வண்டியை எட்டி உதைத்தான். அதிலிருந்து நகைகளும், பொருட்களும் கீழே கொட்டிச் சிதறின.

அவை இவன் கண்களுக்கு மட்டுமே தெரிந்தன. தன்னுடைய "பேராசை குணத்திற்கு கிடைத்த பரிசு" என நினைத்து மிகவும் வருந்தினான் பார்த்தசாரதி.

(முற்றும்)

# மகாபாரதம்




அப்போது ஐந்து நிறமுடைய அழகிய மலரை திரௌபதி கண்டாள். இது போன்று மலர் வேண்டும் என்று கேட்க இதுவும் குபேரனின் நாட்டில்தான் கிடைக்கும் கொண்டு வருகிறேன்" என பீமன் புறப்பட்டான்.

அங்கு மணிமான் என்ற யட்சத்தளபதியுடன் போரிட்டு மணிமானை வீழ்த்தினான். தம்பியைக் கண்டு தருமர் குபேரன் பகை தேவையற்றது எனக் கூறினார்.

இதற்கிடையே மானுடன் ஒருவனால் மணிமான் கொல்லப்பட்ட செய்தியறிந்து குபேரன் அங்கு வர அவரை வணங்கிய தருமரைக் கண்டு குபேரன் சீற்றம் தணிந்தான்.

"மணிமான் மரணம் பண்டைய சாபத்தால் நேர்ந்தது" என அறிந்த குபேரன் தருமருக்கு பல பரிசுப் பொருட்களைக் கொடுத்து வழி அனுப்பினான்.

பீமன் ஒருநாள் [illegible]டுக்குச்சென்றான். புதர்களைக் காலால் மிதித்து அழித்தான்.

அப்போது ஒரு மலைப்பாம்பு பீமனைப் பற்றிச் சுற்றிக் கொண்டது. பீமனால் விடுபட முடியவில்லை.

பரசுராமனையும், இடும்பனையும் ஜராசந்தனையும் கிர்மீரனையும், மணிமானையும் வீழ்த்தியவனுக்கு அப்போதுதான் தெளிவு பிறந்தது, மனிதனின் ஆற்றலை விட விதியின் வலிமை புரிந்தது.

அப்போது பீமனைத் தேடி வந்த தருமர் பீமன் இருக்கும் நிலை கண்டார். பின் பாம்பினை நோக்கி "நீ யார்..? தேவனா? அசுரனா? என்றார்.

உடன் பாம்பு... "நான் நகுஷன் என்னும் மன்னன். அகஸ்தியரின் சாபத்தால் பாம்பாகியுள்ளேன். நீ என் னுடன் விவாதம் செய். அதுவே என் சாப விமோசனம்" என்றது.


தன் முன்னோருள் ஒருவர் தான் நகுஷன் என அறிந்த தருமர் அப்பாம்பை வணங்க சாப விமோசன நேரமும் வந்ததால் நகுஷன் தருமரை ஆசீர்வதித்து விட்டு விண்ணுலகு சென்றார்.

பீமன் தருமருடன் மனித வாழ்க்கை அனுபவங்களைப் பேசியபடியே தங்கும் இடம் வந்து சேர்ந்தான். அருச்சுனனை பிரிந்த சகோதரர்கள் அவரை மீண்டும் எப்போது காண்போம் என்றிருந்தனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு

## • 8 பேர் உயிரிழப்பு
## • 60 பேர் காயம்



(வோஷிங்டன்)

அமெரிக்கா, இண்டியானா பொலிஸ் விமான நிலையத்திற்கு அருகிலுள்ள ஃபெடெக்ஸ் கிடங்கில் நடந்த வெகுஜன துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்ததாகவும் 60 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் மீட்கப்பட்டவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்நாட்டு நேரப்படி வியாழக்கிழமை இரவு 11 மணிக்குப் பிறகு இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடந்துள்ளதாக இண்டியானா பொலிஸ் பெருநகர பொலிஸ் அதிகாரி ஜெனீ குக்செய்தியாளர்களிடம்கூறினார்.

துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்ட துப்பாக்கிதாரி தனது உயிரை மாய்த்துக் கொண்டதாகவும் அவரது உடலை இரவு 11.23 மணிக்கு பொலிஸார் கண்டுபிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-4-8)

# கௌரவ உடையை அணிவது யார்? முற்றுப்புள்ளி வைத்த இங்.ராணி



(லண்டன்)

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப் உயிரழுந்த நிலையில், அவரது உடல் இன்று நல்லடக்கம் செய்யப்படுகிறது.

இங்கிலாந்து ராணியின் குடும்ப வழக்கப்படி இறுதிச் சடங்கின்போது, குடும்பத்தில் உள்ள ஒருவர் இராணுவ உடை அணிந்து செல்வர். இது பாரம்பரிய நிகழ்வாக இருந்து வருகிறது.

இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்கின்போது ஹரி அல்லது 61 வயதான ஆண்ட்ரூ ஆகியோரில் ஒருவர்தான் இராணுவ ஆடையை அணிய வேண்டும் என இங்கிலாந்து பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் செய்தியை மறுத்த அரண்மனை, அரசு குடும்பத்தின் அனைவரும் மௌன அஞ்சலிக்கான அந்த உடையை அணிவார்கள் என்று ராணி முடிவு எடுத்துள்ளதாக மற்றொரு ஆங்கில பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.(நி-4)

## கொரோனாவினால் சிக்கி தவிக்கும் இந்தியா

(டில்லி)

இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் 2 இலட்சத்து 16 ஆயிரத்து 850 பேருக்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளது.

இதற்கமைய அந்த நாட்டில் தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 42 இலட்சத்து 87 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அத்துடன் நேற்று முன்தினம் மட்டும் ஆயிரத்து 183 மரணங்களும் பதிவாகியுள்ளதுடன் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 74 ஆயிரத்து 335 ஆக அதிகரித்துள்ளது. (நி-4-8)

# ஈராக் இராணுவ தளத்தின் மீது ரொக்கெட் தாக்குதல்

(பக்தாத்)

ஈராக் இராணுவத் தளத்தை குறி வைத்து 3 ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஒரு ரொக்கெட், இராணுவத் தளத்தை தாக்கியது. மற்ற இரு ரொக்கெட்டுகளும் ஊருக்குள் போய் விழுந்தன.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

ஈராக் நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள பாஷிகா பகுதியில் துருக்கி நாட்டின் இராணுவத் தளம் செயற்பட்டு வருகிறது.



அந்த தளத்தை குறி வைத்து கடந்த புதன்கிழமை இரவு 3 ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஒரு ரொக்கெட் இராணுவத் தளத்தை தாக்கியது. மற்றஇரு ரொக்கெட்டுகளும் ஊருக்குள் போய் விழுந்தன.

இந்தத் தாக்குதலில் துருக்கி வீரர்ஒருவர்பலியானார். ஒரு குழந்தை படுகாயம் அடைந்தது. இந்தத் தாக்குதலை நடத்தியது யார் என்பது குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (நி-4-8)

## விவேக்கிற்கு மாரடைப்பு

(டில்லி)

தென்னிந்திய திரைத்துறையின் பிரபல நகைச்சுவை நடிகர் விவேக்கிற்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தின் தனியார் வைத்தியசாலை ஒன்றில் அவருக்கு அதி தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்று முன்தினம் நடிகர் விவேக் கொரோனாத் தடுப்பூசி போட்டமை குறிப்பிடத்தக்கது.(நி-4-8)

**உலகளவில் 'கொரோனா**

**உயிரிழப்பு :-3 002 302**

**தொற்று :-137 807 715**

**(நேற்றைய நிலவரம்)**

# போராட்டம் நடத்திய மருத்துவ தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு

## ஒருவர் பலி



(நெபிரோவ்)

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்திய மருத்துவ தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதில் ஒருவர் உயிரிழந்தார். பலர் படுகாயம் அடைந்தனர்.

மியன்மார் இராணுவ ஆட்சியாளர்கள் மீது அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் பொருளாதார தடைகளை விதித்தன.

சூகியை விடுதலை செய்ய வேண்டும் என்று ஐ.நா. சபை வலியுறுத்தியது. ஆனாலும் இராணுவம் இதற்கெல்லாம் இன்றளவும் செவி சாய்க்கவில்லை.

அந்த நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மாண்டலேவில் நேற்று முன்தினம் அறவழிப்போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து, மருத்துவ தொழிலாளர்கள் பெரிய அளவில்கூடி இருந்தார்கள்.

ஆனால் அவர்களை விரட்டியடிப்பதற்காக அங்கு இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை உருவானது.

போராட்டக்காரர்களில் பலரைச் சுற்றிவளைத்து கைது செய்த இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது.

அந்தப்பகுதியில் உள்ள ஒரு மசூதி வளாகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. பலர் படுகாயம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

மியன்மார் அரசியல் கைதிகளுக்கான உதவி சங்கம், இதுவரை அங்கு நடந்த போராட்டங்களில் 715 எதிர்ப்பாளர்களை இராணுவம் கொன்று குவித்துள்ளதாகக் கூறுகிறது. (நி-4-8)

# கார்க்குண்டுத் தாக்குதலில் நால்வர் பலி; 17 பேர் காயம்!



(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தின் சதர் நகரத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கார்க்குண்டு தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டதுடன் 17 பேர் காயமடைந்துள்ளதாக ஈராக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் சதர் நகரில் உள்ள ஒரு பாவிக்கப்பட்ட உபகரணங்கள் விற்கும் பரபரப்பான சந்தைப் பகுதியில் இந்தக் கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை உரிமை கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—308

# நுண்ணங்கிகளும் நுண்ணங்கி எதிர்ப்பும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இப்பூமிப்பந்தின் அனைத்து இயக்கங்களும் நுண்ணங்கிகளின் தனித்துவத்தில் இயங்குகின்றன. உலகை ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் ஒரு நுண்ணுயிரியாகும். இருப்பினும் அதனது கட்டமைப்பு நாளுக்கு நாள் திரிபடைந்து வீரியம் பெற்று பலரை காவு கொண்டும் நோயுற்றவராகவும் மாற்றுவதாக கணிப்பிட்டு சொல்லியிருக்கின்றனர்.

வரலாற்றில் இவ்வாறான வைரஸ்க்களின் தோற்றம் அவ்வப்போது நிகழ்ந்தாலும் இம்முறை வைரஸின் தோற்றம் மனிதனின் நெருக்கீட்டின் பின்விளைவாகவே ஊகிக்க முடிகின்றது. இக்கூற்றினை நுண்ணங்கியலாளர்கள் பலரும் ஆமோதித்திருக்கின்றார்கள். ஆக மொத்தத்தில் மனிதனினால் மனிதனுக்கு தோற்றுவிக்கப்பட்டுள்ள ஆபத்தின் வெளிப்பாடாகவே கொரோனா வைரஸின் தாக்கத்தினை பார்க்கலாம்.

நுண்ணங்கிகள் பலவகையாக இருப்பினும் அதில் பாதிப்பை ஏற்படுத்துவன குறிப்பிட்ட சிலவாகவே இருக்கின்றன. மாறாக ஏனையவை நன்மை தருகின்ற வகைகளுள் அடங்குகின்றன. இவ்வாறான நன்மை தருகின்றனவற்றை நாம் விவசாய செய்கையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கினால் அவை பயிர்களின் சுகத்திற்கும் அவற்றின் மேம்பட்ட அதீத வளர்ச்சிக்கும் பெரிதும் கைகொடுக்கும்.

நுண்ணங்கிகளில் நோயை ஏற்படுத்துவன தாவரங்களில் பாதிப்பை ஏற்படுத்துவன என்பதற்கப்பால் எமது சுகாதாரத்தை நேரடியாக பாதிப்பனவாக இருக்கின்றன. நோய் ஏற்படும்போது இவ்வாறான நுண்ணங்கிகளின் விருத்தியை கட்டுப்படுத்த அல்லது அவற்றை இல்லா தொழிக்க நுண்ணங்கி களை கட்டுப்படுத்தும் குறிப்பிட்ட மருந்து வகைகள் பயன் படுத்தப்படுகின்றன.

அநேகமாக பக்ரீறியாக்களைக் கட்டுப்படுத்த பக்ரீறியா எதிர்ப்பு மருந்துகள் (Antibiotics) பயன்படுத்தப்படுகின்றன. பூஞ்சணங்களை கட்டுப்படுத்த பூஞ்சணநாசினிகள் (**Fungicides**) பயன் படுத்தப்படுகின்றன. இவ்வாறாக பயன்படுத்தும் நுண்ணங்கிகளை கட்டுப்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்களை நுண்ணங்கிக்கெதிரானவை (Antimicrobial) என அழைப்பர். இந்த எதிர்ப்புத்தன்மை நலிவடைவதற்கு அசேதன இரசாயனங்கள் முறையற்று பயன்படுத்தடுவதும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுவதும் காரணமாக அமைகின்றன.

நோயுற்ற ஒருவர் வைத்தியரை அணுகிஅவரது ஆலோசனையை முறையாகப் பெறாமல் தமக்குத் தெரிந்தவாறு பரிசோதனை எதுவும் செய்யாது இவ்வாறான பக்ரீறியாக்களுக்கு எதிரான மருந்தினைப் பயன்படுத்துவதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.

ஒரே வகையான இரசாயனங்கள் பரிகரிக்கப்பட்ட அளவுக்கு குறைவாக பயன்படுத்துவதனாலும் அவை பழக்கப்பட்டுப் போவதும் நுண்ணங்கிளிடையே எதிர்ப்பு தன்மை உருவாவதற்கு காரணமாக அமைகின்றது. இதனை விட இவ்வாறு நுண்ணங்கிகள் அவற்றைக் கட்டுப்படுத்தும் இரசாயனங்களுக்கு எதிர்ப்புத்தன்மையை கொண்டிருப்பதனால் பாதிப்பை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளை கட்டுப்படுத்த முடியாதனவாகி விடுகின்றன.

இந்த நிலைமை பொதுவாக பயிர்களில் வரும் பீடைகளையும் நோய்களையும் கட்டுப்படுத்துவதற்கு விசிறப்படும் இரசாயனங்களினால் ஏற்படுவது இயல்பு. தொடர்ச்சியாக பயன்படுத்தப்படும் இரசாயனங்களுக்கு நுண்ணங்கிகள் இயைவாக்கமடைவதும் அதனால் அவற்றை கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுவதும் பரவலாக நடைபெறுகின்றது.

இங்கே தொடர்ச்சியாகவும் தேவையற்றும் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்களிற்கு தீமை தரும் நுண்ணங்கிகள் சிறிது சிறிதாக இயைவாக்கமடைவதால் இறுதியில் அந்த இரசாயனங்களைப் பயன்படுத்தினாலும் கட்டுப்படாத தன்மையை தமக்குள் உருவாக்கி விடுகின்றன. இதனால் விவசாய செய்கையில் குறிப்பிட்ட ஒரு இரசாயனத்தை அதாவது பீடைநாசினியை தொடர்ந்து பயன்படுத்தக்கூடாதென அறிவுறுத்தப்படுகின்றது. மாற்றி மாற்றி பயன்படுத்துவதனால் இவ்வாறான எதிர்ப்பு தன்மை உருவாவதனை தவிர்க்க முடியும். அதிலும் நாம் முறையாக தேவைக்கேற்ப பயன்படுத்துவது வலியுறுத்தப்படுகின்றது.

விவசாயத்தில் ஏற்பட்டுள்ள நிலைபோல மனிதனில் நோயை உருவாக்கும் நுண்ணங்கிகளும் இவ்வாறு இயைவாக்கமடைவதும் நுண்ணங்கி எதிர்ப்புக்கு எதிராக செயற்பட முனைவதனையும் ஆய்வு மூலம் கண்டறிந்துள்ளார்கள். இது நமக்கெல்லாம் முக்கியமானதொரு செய்தியாகும்.


இவ்வாறான நுண்ணங்கியெதிருக்கு எதிர்ப்புத் தன்மை என்பது பல்வேறு வழிகளில் எமக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என அறிய முடிகின்றது. இவ்வாறான நுண்ணங்கியெதிருக்கான எதிர்ப்பு என்பது தொற்றுதலினை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளான பூஞ்சணம், பக்ரீறியா மற்றும் வைரஸ்க்கள் என்பவற்றில் அதிகரித்த அளவில் உருவாவதனால் சிறந்த நோய்த்தடுப்பு மற்றும் பாதுகாப்பினை மக்களுக்கு குறிப்பிட்ட நோய்களுக்கு கொடுக்க முடியாமல் போகலாம் என அறிய முடிகின்றது.

சுகவீனமாக உணரும் போது பயன்படுத்தும் மருந்துகள் முறையே மருத்துவருடன் கலந்தாலோசித்தபின் அதற்கான பரிசோதனைகளை செய்த பின்பு மருத்துவரின் பரிந்துரைக்கேற்ப பயன்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கேற்றாற்போல வெறுமனே கேட்டதை வைத்துக்கொண்டு பரிகரிக்க முனையக்கூடாது. குறிப்பாக உயிர்ரெதிரிகளை (antibiotics) பயன்படுத்தும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். முறையற்ற தேவையற்ற மருந்து பிரயோகம் பிரச்சினையை அதிகரித்து விடும் என்பதனை கவனிக்குக. எமது தவறான செயன்முறையினால் நோயெதிர்ப்பு தன்மையை நாமே இழந்து விடும் அபாயம் எம்முன்னே இருக்கின்றதென்பதை உணர்ந்து கொண்டு மனித சுகாதாரத்திலும்சரிவிவசாய செய்கையிலும் சரி பயன்படுத்தும் இரசாயனங்களை குறிப்பாக நுண்ணங்கியெதிர்ப்பு மருந்துகளை சரியான அளவிலும்தேவைக்கேற்பவும்பயன் படுத்த வேண்டும்.

இன்னும் இந்த எதிர்ப்பு தன்மைக்கு காரணமான பரம்பரையலகு குறிப்பிட்ட நுண்ணங்கிகளில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு வந்து சேர்வதும் இங்குள்ள பிரச்சினையாகும். இந்த நுண்ணங்கியெதிர்ப்பின் இழப்பானது பரந்துபட்ட அளவில் உலகளாவிய ரீதியில் உருவாகி வருவதாகவும் கண்டறியப்பட்டுள்ளதுடன் அவற்றுடன் தவிர நாளுக்கு நாள் நோயை உருவாக்கும் நுண் ணங்கிகளில் புதிய எதிர்ப்பு தன்மை பெருகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. நோயெதிர்ப்பு தன்மையின் வீரியம் காரணமாக மருந்துகளில் எதிர்ப்பு தன்மை அதிகரிப்பதும் அதனால் மரு ந்துகளை பயன்படுத்தும் போது தேவை கருதி பயன்படுத்தவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நுண்ணங்கியெதிருக்கான எதிர்ப்புத்தன்மை தீமைதரும் நுண்ணங்கிகளில் பெருகிவிடும் போது அவற்றினால் எமக்கேற்படும் ஆபத்தை நாம் தவிர்க்க முடியாது போய்விடும் என்பதோடு அத்னால் இறப்புக்களும் அழிவுகளும் அதிகரிக்கும் என்பதனையும் உணர்க. இதுபற்றி மக்களுக்கு இன்னும் விரிவாக விளக்கமளிக்க வேண்டும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 321



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவை எதிர்த்து திடமான மனத்துடன் வாழப்பழக வேண்டும்

## நேர்மறையான மனநிலை நோயெதிர்ப்பு மண்டலத்தை பாதுகாக்கும் என்கின்றனர் மனோதத்துவவியலாளர்கள்

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் குறித்த செய்திகள், பாதிப்புகள், இழப்புகள் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது. பலரும் மன உளைச் சலுக்கு ஆளாகுகின்றனர். இதுவும் ஒருவித பாதிப்பே என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அனைவரும் திடமான மனதுடன் வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என மனோ தத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.**

கொரோனா அச்சத்தில் இருந்து வெளியேறி, கொரோனா பரவல் காலத்திலும் மனதை தேவையற்ற பயத்தில் இருந்து மீள உளவியலாளர்கள் சில பரிந்துரைகளை அளித்துள்ளனர்.

முடிந்தால் வீட்டில் இனிமையான இசையைக் கேளுங்கள். குழந்தைகளை மகிழ்விக்க, கதைகள் சொல்வது, அவர்களுடன் பலகை விளையாட்டு விளையாடுவது, எதிர்கால திட்டங்களைப் பகிர்வது என உங்களை ஈடுபடுத்துங்கள். அத்துடன் வீட்டில் அனைவரும் அடிக்கடி கைகளைக் கழுவுவது போன்ற ஒழுக்கத்தை பேணுங்கள்.

உங்கள் நேர்மறையான மனநிலை உங்கள் நோயெதிர்ப்பு மண்டலத்தைப் பாதுகாக்க உதவும். அதேநேரத்தில் எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நோயெதிர்ப்பு மண்டலத்தை மனச்சோர்வடையச் செய்து வைரஸ்களுக்கு எதிராக பலவீனப்படுத்துகின்றன.

மிக முக்கியமாக இதுவும் கடந்து போகும். நாம் பாதுகாப்பாக இருப்போம் என்று உறுதியாக நம்புங்கள் என உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-4)

# சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனால் ரூபாய் வலுப்பெறாது-பொருளாதார நிபுணர்கள்

(கொழும்பு)

சீன அபிவிருத்தி வங்கியிடம் இருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகக் கிடைத்தாலும் ரூபாயின் வீழ்ச்சியைத் தடுப்பதற்கான வலுவான காரணியாக அது அமையாது எனப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சீன அபிவிருத்தி வங்கியிடம் அரசாங்கம் கோரியிருந்த 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை நேற்று முன்தினம் கிடைத்தது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 18 ஆம் திகதி இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்து வருகிறது.

கடந்த 12 ஆம் திகதி அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் விற்பனைப் பெறுமதி 203.73 ஆக காணப்பட்டது.

இந்த நிலையில் இலங்கை மத்திய வங்கி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 199.80 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன் விற்பனைப் பெறுமதி 204.62 ஆக பதிவாகியிருந்தது.

சீனாவிடம் இருந்து பெறப்பட்டுள்ள கடன் ஊடாக அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள கடன்களைச் செலுத்த முடியும்.

அத்துடன் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும். எனினும் குறித்த கடன் மூலம் குறைந்த காலத்திற்கே ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியைத் தடுக்க முடியும் எனப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (நி-4)

# 6 கட்சிகளின் செயற்பாடுகள் இடை நிறுத்தம்



(கொழும்பு)

கட்சிகளுக்குள் காணப்படும் கருத்து முரண்பாடுகள் காரணமாக நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ள கட்சிகளின் செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தத் தேர்தல்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

இப்படியான 6 கட்சிகள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்சிகளின் தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளுக்கு சிலர் உரிமை கோரியுள்ளதால் சட்ட ரீதியான பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் இதனை தீர்க்க அவர்கள் நீதிமன்றத்தை நாடியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

வழக்குகள் முடிவடையும் வரை இந்த கட்சிகளின் செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்த தீர்மானித்துள்ளதாகவும் இதன் காரணமாக குறித்த கட்சிகள் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் கட்சிகளின்பெயர்களை வெளியிட முடியாது எனவும் தேர்தல்கள்ஆணைக்குழுவின் தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கரை சேரா மனிதர்கள்!

ஒரு ஊரில் ஒரு பெரிய ஞானி இருந்தார். அவர் படுக்கையில் இருக்கிறார். இன்னும் கொஞ்ச நேரம்தான் அவர் இந்த உலகத்தில் இருக்கப்போகிறார்.

அவரைச் சுற்றி ஏகப்பட்ட கூட்டம். ஏற்கனவே அவருடைய உபதேசங்களைக் கேட்டவர்கள் பல பேர் வந்து அவரைச் சுற்றி நிற்கிறார்கள்.

அந்த ஞானி மெதுவாக கண்ணைத் திறந்து பார்க்கிறார். எல்லோரும் அவருடைய கடைசி வார்த்தையைக் கேட்பதற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஞானி மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

"நான் என்னுடைய வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு நிறையப் போதனைகள் சொல்லிக்கொண்டு வந்தேன்...பேரானந்தம், மகிழ்ச்சி, தியானத்தன்மை இதைப்பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறேன்.

இப்போது நான் வேறு ஒரு கரைக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். நான் இனிமேல் இந்தக் கரையில் இருக்கமாட்டேன். நீங்கள் நான் சொன்னதையெல்லாம் கேட்டீர்கள்...

ஆனால் எதையும் நீங்கள் நடைமுறைப்படுத்திப் பார்க்கவில்லை! எல்லாம் கேட்டதோடு சரி... அத்தோடு விட்டுவிட்டீர்கள்...பின்னர் அதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்துவிட்டீர்கள். மேலும் அதைத் தள்ளிப் போடுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை...இப்போது நான் போய்க்கொண்டிருக்கிறேன். உங்களில் யாராவது என்னுடன் வருவதற்குத் தயாரா?" என்று கேட்டார்.

அவ்வளவுதான்...யாரும் வாயைத் திறக்கவில்லை. ஒரே மௌனம்... சத்தமே இல்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே நிற்கிறார்கள்.

அந்தக் கூட்டத்தில் ஒரு ஆள் அந்த ஞானியுடனே 40 வருடத்திற்கும் மேலாக இருந்திருக்கிறான்...அவனும் வாயைத் திறக்காமல் இன்னொருத்தன் முகத்தை பார்த்துக்கொண்டு நிற்கிறான்!

இந்தச் சமயத்தில்...பின்னால் நின்றுகொண்டிருந்த ஒருவன் கையைத் தூக்கினான். ஞானி அவனைப் பார்த்தார்.

"சரி...ஒருத்தனுக்காவது நம்முடன் வருவதற்குத் தைரியம் இருக்கிறதே!" என்று நினைத்தார். ஆனால் அந்த ஆள் என்ன சொன்னான் தெரியுமா?

ஐயா...நீங்கள் கேட்கும் போது நான் உடனே எழுந்துகொள்ளவில்லை... கையை மட்டும் தான் தூக்கினேன். என்ன காரணம் என்றால்...நான் எப்படி அடுத்த கரைக்கு வந்து சேருவது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான். அந்த விபரத்தை மட்டும் இப்போது உங்களிடம் இருந்து தெரிந்துகொள்ள ஆசைப்பட்டேன்.

ஏன் என்றால்...இப்போது நான் உங்களுடன் வருவதற்குத் தயாராக இல்லை. எவ்வளவோ காரியங்களை நான் இன்னும் இங்கே முடிக்க வேண்டியிருக்கிறது. வீட்டுக்கு ஒரு விருந்தினர் வந்திருக்கிறார். என்னுடைய இளைய மகனுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டியிருக்கிறது.

அதனால் இன்றைக்கு உங்களுடன் வர முடியவில்லை...அதுமட்டுமில்லை இப்போது உங்களுடன் அடுத்த கரைக்கு வந்தால் திரும்பி வர முடியாது என்று வேறு சொல்கிறீர்கள்!

அதனால் இப்போது நான் வரவில்லை...இன்னொரு நாள் நிச்சயமாக நான் உங்களை அங்கே வந்து சந்திக்கிறேன். அதனால் இப்போது நீங்கள் இன்னொரு தடவை எங்களுக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும். ஏற்கனவே பல தடவை சொல்லியிருக்கிறீர்கள். தயவு செய்து இப்போது ஒரு தடவை சொன்னீர்கள் என்றால் சௌகரியமாக இருக்கும்.

அந்த அடுத்த கரையை அடைவது எப்படி? இப்போது ஒரு தடவை அதை விளக்கமாகச் சொன்னீர்கள் என்றால் நன்றாக ஞாபகப்படுத்திக்கொள்வேன்...அந்த சரியான சமயம் வரும்போது இது எனக்கு உதவியாக இருக்கு! என்றாராம்.

ஆனால் உண்மை என்ன தெரியுமா? அந்த சரியான சமயம் வரவே இல்லையாம்!

இந்தக் கதை அந்த ஒரு ஆளுக்கு மட்டுமல்ல...கிட்டத்தட்ட எல்லோருக்குமே அது பொருந்தும் என்கிறார்கள் விபரம் தெரிந்தவர்கள்.

எல்லோருமே அந்தச் சரியான தருணத்துக்காகத்தான் காத்திருக்கிறார்களாம். அதற்காக ஜோசியம் பார்க்கிறார்கள். கைரேகை பார்க்கிறார்கள். நாளைக்கு என்ன நடக்கும் என்னும் ஆவலில் எல்லோரும் இருக்கிறார்கள்.

ஆனால் அந்த ஒரு நாள் ஒருபோதும் வரப்போவதில்லை...நீங்கள் தள்ளிப் போடுவதற்காகப் பல அர்த்தமில்லாத காரணங்களைத் தேடுகிறீர்கள் என்கிறார் ஓஷோ.

காத்திருப்பதிலேயே நமது காலம் ஓடிப் போகிறது. ஏன் என்றால் இன்றைய சிந்தனை நமக்கு இருப்பதில்லை. நாளைய சிந்தனையிலேயே இன்றைய பொழுதை ஓட்டிக்கொண்டிருக்கிறோம்.

நாளைக்கு...நாளை மறுநாள் பற்றிய சிந்தனை...இப்படியே போய்விடும்! கரையைத் தொட்டுப் பார்ப்பது எப்போது?

நமக்கு வேண்டிய ஒருத்தர் ஒரு ரயில்வே நடைபாதையில் நின்றுகொண்டிருக்கிறார். அங்கே இருப்பவர்களிடம் விசாரிக்கிறார்.

"ஏங்க...கிழக்கே போகும் ரயில் போய்விட்டதா?" என்றார். "போய்விட்டது!" என்றார்கள்.

கொஞ்ச நேரம் கழித்து "ஏங்க...மேற்கே போகும் ரயில் போய்விட்டதா?" என்றார். "போய்விட்டது!" என்றார்கள்.

கொஞ்ச நேரம் கழித்து மறுபடியும் "ஏங்க பத்தரை மணி வண்டி போய்விட்டதா?" என்றார். தொடர்ந்து காலையில் இருந்து மாலை வரைக்கும் இப்படி ஒரே இடத்தில் நின்று கேட்டுக்கொண்டே இருக்கிறார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் அவரிடம் வந்து,

"ஏங்க...நீங்கள் எங்கே போகவேண்டும்?" என்று கேட்டார்.

இவர் மெதுவாக..."இந்த ரயில்வே லைனைத் தாண்டி அந்தப் பக்கம் போகவேண்டும்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 16 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டபோது அந் நூலகத்தின் நூலகராக இருந்த திருமதி.ரூபவதி நடராஜாவின் துயர்**

எஸ்.எஸ். சபாரத்தினம் தொழில் நுட்பக் கல்லூரி நூலகராகப் பதவி யேற்றுச் சென்ற பின்பு திருமதி. ரூபவதி நடராஜா அதிவிசேட நூலகராக 1974 ஆம் ஆண்டு யாழ். பொதுசன நூலகத்தில் பதவி ஏற்றார். அவர் 1974-1975 இலும் அதன் பின்பு 1977 இலிருந்து 1987 வரையிலும் பிரதம நூலகராக பதவி வகித்தார்.

அவர்கள் எழுதி வெளியிட்ட 'யாழ்ப்பாணம் பொது நூலகம் அன்றும் - இன்றும் எனும் நூல் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பொதுநூலக மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி பொ.பாலசுந்தரம்பிள்ளையின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் சிறப்பு உரை ஒன்றினையும் நிகழ்த்தியிருந்தார்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கலந்து கொண்டிருந்தார். சீ.வீ.கே. சிவஞானம் யாழ்.நூலகம் 1981 இல் தீயிடப்பட்டபோது யாழ். மாநகர சபையின் ஆணையாளராக இருந்தார். இந்நூலின் முதற்பிரதியை முன்னாள் வடகிழக்கு கல்வி பண்பாட்டலுவல்கள், மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நூலாசிரியர் திருமதி ரூபவதி நடராஜாவுக்கான கௌரவிப்பு ஒன்றினை யாழ் மாநகரசபை சார்பில் முதல்வர் மற்றும் ஆணையாளர் இணைந்து வழங்கியிருந்தமை விசேட அம்சமாகும். மேலும் இந் நிகழ்வில் மாநகரசபையின் முன்னாள் முதல்வர்கள், முன்னாள் ஆணையாளர்கள், முன்னாள் பிரதம நூலகர்கள், மாநகரசபையின் ஆணையாளர் த. ஜெயசீலன், மாநகரசபை உத்தியோகத்தர்கள், பொதுநூலகத்தின் பிரதம நூலகர் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நூலுக்கு முன்னாள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் அறிமுகக் குறிப்பு எழுதியிருந்தார். அதில் அவர் குறிப்பிட்டதாவது, பல்கலைக்கழகப் பட்டதாரியும் நூலக விஞ்ஞானத் தகைமை பெற்றவருமான நூலாசிரியர் திருமதி ரூபவதி நடராஜா யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் பிரதம நூலகராக 1977 முதல் 1981 வரையான காலப்பகுதியில் சேவையாற்றியவர். யாழ்ப்பாண மண் பல அவலங்களையும் அழிவுகளையும் சந்தித்தது இந்தக் காலப்பகுதியில் ஆகும்.

இலங்கைத் தமிழரின் கல்வி கலாசார பொக்கிஷமாக விளங்கிய யாழ்ப்பாண நூலகம் 01.06.1981 இல் எரியூட்டப்பட்ட காலத்திலும் பின்னர் இந்த அழிவிலிருந்து மீண்டெழுந்து நூலகத்துக்கான புனரமைப்புச் செய்ததுடன் மேற்குப் புறமாக புதிய கட்டடத்தையும் அமைத்து 04.06.1984 ஆம் திகதி அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் திறந்து வைக்கும் வரையிலும் அதற்குப் பின்னரும் இவர் பிரதம நூலகராகப் பணியாற்றினார். இந்த முழுக் காலத்திலும் மாநகரசபை ஆணையாளராகவும், விசேட ஆணையாளராகவும் நான் இருந்தமையால் இவரின் பணியினை நான் நன்கு அறிவேன்.

உலக நூல்களின் சுருக்கமான வரலாற்றை சுருக்கமாக கூறி நூலினை ஆரம்பித்திருக்கும் நூலாசிரியர் யாழ்ப்பாணத்து நூலகங்களின் வரலாற்றையும் யாழ்ப்பாண பொது நூலகத்தின் ஆரம்பம், வளர்ச்சி, வீழ்ச்சி, மீண்டெழுந்தமை போன்ற நிகழ்வுகளையும் ஆதாரங்களோடு குறிப்பிட்டுள்ளார். இந்த ஆதாரங்களையும் தகவல்களையும் சேகரிப்பதற்கு இவர் எடுத்துக் கொண்ட சிரமங்கள் பாராட்டுக்குரியது.

யாழ்ப்பாண நூலகம் பற்றி பலர் எழுதிய கட்டுரைகள், நூல்கள் பலவற்றில் தவறான தகவல்கள் இருப்பதை நான் அவதானித்துள்ளேன். எனினும் இந்த நூலில் கூடுமானவரை சரியான வரலாற்று தகவல்களையும் தரவுகளையும் பதிவு செய்த நூல் ஆசிரியருக்கு எமது பாராட்டுக்கள். தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு இது ஒரு உசாத்துணை நூலாக அமையும் என்று திடமாக நம்புகிறேன்.

இவ்வாறு சீ.வீ.கே. சிவஞானம் 'யாழ்ப்பாணம் பொது நூலகம் அன்றும் - இன்றும்' நூலிக்கு அறிமுகக் கு[illegible] இந் நூலின் [illegible] 1981ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் திகதி எரிந்த நூலகத்தில் நூலாசிரியர் இருந்தபோது தன் மனத் துயரை பின்வருமாறு விபரிக்கின்றார்.

"யாழ் நகரமே, அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தது பல்வேறு இடங்களில் இருந்தும் இவ் அழிவினை பார்ப்பதற்கென மக்கள் பெருவாரியாக வந்து போயினர். கொழும்பு பல்கலைக் கழக வளாகத்தில் நூலகவியல் படித்த காலத்தில் விரிவுரையாளராக இருந்த எஸ்.எம். கமால்தீனை நூலகத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரும் இக்கோரக் காட்சியினை கண்டு அதிர்ச்சியுற்றவராகவும் மனமுடைந்தவராகவும் காணப்பட்டார். நூல்களை, கிடைத்தற்கரிய அரிய நூல்களை எவ்வாறு பகுப்பாக்கம் செய்து வாசகர்களுக்கு வழங்க வேண்டும்.நேரம் தவறாது எப்படிச் சேவை செய்தல் வேண்டும் என தன்னிடம் நூலகவியல் கல்வியைப் பயின்ற மாணவர்களுக்குப் போதித்த விரிவுரையாளரான கமால்தீன் இக் கோரக் காட்சியினைக் கண்டு, ஆறுதல் சொல்ல வார்த்தையின்றி, இடிந்துபோய் உறைந்து நின்றதைக் கண்ணால் கண்டு கலங்கி நின்றேன். சாம்பலாகிக் கருகிக் கிடக்கும் இந்த நூல்களும், தூய வெண் நிறத்தில் நிமிர்ந்து நின்ற இந்த நூலக கட்டடமும் என்ன பிழையினை, அறிவற்றோருக்குச் செய்தது? அறிவுக் களஞ்சியமாக உயர்ந்து நின்ற நூலகத்தின் தோற்றமா? அல்லது வடபகுதி தமிழ் மக்களது வளமான அறிவு விருத்தியா? காரணம் எதுவும் தெரியாது கண் கலங்கி நின்றேன்.

பெருமையும் கீர்த்தியும் பெற்று விளங்கிய இந்நூலகம் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக அரும்பாடுபட்டுச் சேர்த்த விலை மதிக்கவொண்ணா தமிழர் வரலாற்று அறிவு நூல்கள், கலைப் பொக்கிஷங்கள் யாவும் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி சாம்பல் மேடாகிக் கிடந்தன.

> **"சாம்பலாகிக் கருகிக் கிடக்கும் இந்த நூல்களும், தூய வெண் நிறத்தில் நிமிர்ந்து நின்ற இந்த நூலக கட்டடமும் என்ன பிழையினை அறிவற்றோருக்குச் செய்தது? அறிவுக் களஞ்சியமாக உயர்ந்து நின்ற நூலகத்தின் தோற்றமா? அல்லது வடபகுதி தமிழ் மக்களது வளமான அறிவு விருத்தியா? காரணம் எதுவும் தெரியாது கண் கலங்கி நின்றேன்" முன்னாள் நூலகர் திருமதி ரூபவதி நடராஜா நூலகத்தின் சாம்பலைக் கண்டு கூறியவை.**

சாதி, இன, மத வேறுபாடுகள் எதுவுமின்றி, அனைவரையும் சமமாக போற்றி இரவு-பகலாக சேவை செய்த அறிவாலயத்தை ஒரு நொடிப் பொழுதில் எரித்துச் சாம்பலாக்கியமை எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத பெரும் ஆறாத் துயரினை ஏற்படுத்தியது. தமிழர் வரலாற்று நூல்களை, அவர்களின் கலாசாரப் பொக்கிஷங்களை பாதுகாக்கும் பெட்டகமாகக்கட்டப்பட்ட நூலகத்தை எரித்தமை யாழ்.மக்களை மட்டுமன்றி உலகம் பூராகவும் வாழும் தமிழ் மக்களையும் அறிவுடையோர்களையும் கதி கலங்கச் செய்தது."

இவரின் ஆசான் எஸ்.எம். கமால்தீன் இக்கோரக் காட்சியினை கட்டுரையாக மூதறிஞர் க.சி.குலரத்தினத்தின் "யாழ்ப்பாண நூல் நிலையம் ஓர் ஆவணம்" என்னும் நூலில் எழுதியுள்ளார். அவரின் பார்வை கீழே தரப்பட்டுள்ளது.

**எரிந்த நூலகத்தின் நடுவில் எஸ்.எம் கமால்தீனின் பார்வை**

எஸ்.எம். கமால்தீன் இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரியாவார். கனடாவிலுள்ள பல்கலைக் கழகத்திலும் பட்டம் பெற்றவர். நூலகர்களுக்கான பயிற்சியும் பெற்றுள்ள இவர், 'பதினெட்டு ஆண்டுகள் கொழும்பு பொது நூலகத்தின் இணைத்தலைமை நூலகராய்ப் பணிபுரிந்துள்ளார். பின்னர், இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவராகவும் சில ஆண்டுகள் சேவை செய்துள்ளார். UNESCO நிறுவனத்தின் சார்பாகப் பல நாடுகளின் நூல் நிலையங்களைப் பார்வையிட்டதுடன், அவற்றை தர முயர்த்தும் வழிகளை ஆய்ந்த மாநாடுகளிலும் பங்குபற்றியுள்ளார். "தாய்லாந்தின் தலைநகரிலே", "பாடசாலை நூலகக்கை நூல்", "நூலும் நூலகமும்" ஆகிய நூல்களின் ஆசிரியர். நூலக வளர்ச்சி, தமிழ் இலக்கிய நயப்பு, முஸ்லிம் சமுதாயத்தின் சமூக - பண்பாட்டு உயர்வு பற்றிய துறை களிலே தமது சேவைகளைப் பதிவு செய்துள்ளார்.

**எரிந்து கிடந்த நூலகத்தை பார்வையிட்ட இவர் தனது மனநிலையை பின்வருமாறு பதிவு செய்கிறார்.**

அந்த விசாலமான மண்டபத்தின் தரை முழுவதுமே சாந்தும் சாம்பலுமின்றி, வேறெதுவும் காணப்பட வில்லை. ஓர் இடுகாட்டின் மத்தியில் நிற்பது போன்ற உணர்ச்சி என்னை மேலிட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரோஷன் அபேசுந்தரவுக்கு பதவி உயர்வு



(கொழும்பு)

இலங்கை விமானப்படை தளபதி ஏயர் மார்ஷல் சுதர்ஷன பத்திரன நேற்று முன்தினம் முன்னணி விமானப் படை வீரர் ரோஷன் அபேசுந்தரவை கார்போரல் பதவிக்கு தரம் உயர்த்தினார்.

தலைமன்னரில் இருந்து தனுஷ்கோடி வரை நீந்திக் கடந்தமைக்கு பெருமை சேர்க்கும் வகையில் ரோஷன் அபேசுந்தரவுக்கு இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி

## வாழ்வை நெறிப்படுத்தும் இந்து சமயம்

இந்து சமயத்திற்கு "சனாதன தர்மம்" என்ற பெயரும் உண்டு. இதன் பொருள் "என்றுமுள்ள வாழ்க்கை நெறி" என்பதாகும். அதாவது எந்த வழியில் அணுகினாலும் இறைவனை அடையலாம் என்பது இதன் அடிப்படையாகும்.

தற்போது விஞ்ஞானம் பெற்றுள்ள அபரிமிதமான பிரமிக்க வைக்கும் வளர்ச்சி உலகம் முழுவதும் எல்லா இனத்திலும் கலாசாரம், பண்பாடுகளில் மாபெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் தமிழ் சமுதாயத்தின் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் போற்றி, பேணி வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

அதற்கு இந்து சமயத்தில் உள்ள வாழ்வியல் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வைக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். இந்து சமய வாழ்க்கை என்பது அன்பு, அறிவு, ஆற்றல், செல்வம், ஒழுக்கம், ஒற்றுமை, செயல், தியாகம், நம்பிக்கை உட்பட பல்வேறு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது.

மேற்கண்ட அனைத்தும் ஒருங்கிணையும்போது அது ஒரு சிறந்த ஆளுமையை வளர்க்கும். இந்து சமயத்தின் இந்த ஒருங்கிணைந்த பயிற்சியைப் பெறும் போது மனிதன் வாழ்க்கையில் சலனம் இல்லாத மேம்பாட்டை எட்ட முடியும்.

பொதுவாக இறைவனை அடைவதற்கான இறை தரிசனத்தை கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம் ஆகிய நான்கு வழிகள் மூலம் பெறலாம் என்று நம் முன்னோர்கள் வரையறுத்துள்ளனர்.

ஆனால் உண்மையில் இறைவனை நெருங்குவதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. வேதங்கள் உபநிடதங்கள் கற்றவனுக்கு இறைவன் அருள் கிடைக்காமல் போகலாம். வேதபாராயணம் பற்றி ஒரு வரி கூட தெரியாதவனுக்கு இறைவன் காட்சி கொடுக்கலாம். எனவே இறைவழிபாட்டில் வெளிவேடங்கள் தேவை இல்லை. இயல்பான வழிபாடே போதுமானது.

இதற்கு மேலும் உதவும் வகையில் 8 வகை குணங்களை இந்து சமயம் வரையறுத்துள்ளது.

1.உலகில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்புடன் இருக்க வேண்டும். கருணையை கைவிடக்கூடாது. இதை வலியுறுத்தவே, அன்பே சிவம் என்றனர்.

2.பொறுமை மற்றும் எதையும் சகித்துக் கொள்ளும் மன உறுதி வேண்டும்.

3.மற்றவர்களை நினைத்து பொறாமைப்படக்கூடாது.

4.உடல் மனம் செயலில் எப்போதும் தூய்மையுடன் இருத்தல் வேண்டும்.

5.தன் முனைப்பின் காரணமாகவும் பேராசை காரணமாகவும் எழக்கூடிய வலி மிகுந்த உழைப்பு வேண்டும்.

6.எப்போதும் கலகலப்பாக இருக்க வேண்டும்.

7.எப்போதும் நல்ல நடத்தையுடன் இருக்க வேண்டும்

8.எல்லா மோகங்களும் வலுவற்றவை, நிலையற்றவை என்பதை உணர வேண்டும்.

இந்த எட்டு வகை குணங்கள் மூலம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பெற முடியும். இவை இறைவனை எளிதில் காண உதவும்.


இந்து சமயத்தின் முக்கிய அம்சமே வேதங்கள், உபநிடதங்கள், தத்துவங்கள், ஆகமங்கள், புராணங்கள், தர்மங்கள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்ட ஆன்மிக அடிப்படையில் தங்கி இருப்பது தான். அது மட்டுமன்றி எந்த நல்ல கருத்தையும் ஏற்றுக் கொள்வது இந்து சமயத்தின் தனித்துவமான சிறப்பாகும்.

இந்து சமயம் மனிதனுக்கும் அவனது கொள்கை, வாழ்க்கை முறை, வழிபாட்டு முறைகளுக்கு முழுமையான சுதந்திரத்தை கொடுத்துள்ளது. அதனால் தான் எத்தனையோ சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் இருந்தாலும் இந்துக்கள் தம் இறை வழிபாட்டை வாழ்வியலோடு ஒருங்கிணைந்த ஒன்றாக எளிமையானதாக வைத்துள்ளனர். (கொழும்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



(ஹற்றன்)

பலத்த மழை வீழ்ச்சி காரணமாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கண்டி, கேகாலை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

## ஆற்றில் மிதந்து வந்த மனிதத் தலை

(மாத்தறை)

மாத்தறை- தொட்டமுன பகுதியில் நில்வள கங்கையில் இருந்து ஆண் ஒருவரின் தலை அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இது கொலையா? அல்லது தற்கொலை செய்து கொண்ட நபரொருவருடையதா? என்பது தொடர்பில் இதுவரையில் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-4)

## 'ஐஸ்' உடன் ஒருவர் கைது

(கொழும்பு)

வத்தளை ஹுனுபிட்டி பகுதியில் 2 கிலோவுக்கும் அதிகம் எடைகொண்ட "ஐஸ்" போதைப்பொருளுடன் ஒருவர் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 200 |
| தக்காளி | 120 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 70 | 50 |
| கோவா | 120 | 120 | 160 |
| கரட் | 200 | 160 | 280 |
| பூசணி | 70 | 70 | 80 |
| புடோல் | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 220 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 160 |
| பயற்றங்காய் | 200 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 160 |
| கறிமிளகாய் | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 800 |
| போஞ்சி | 200 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | 180 | 200 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 50 |
| தேசிக்காய் | 140 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 220 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 200 | -- | 280 |
| முள்ளங்கி | 40 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | 100 | 120 |

# இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை விடுவிக்க கோரிக்கை

**(மன்னார்)**

**இந்தியக் கடற்படையினரால் கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

இந்திய கடல் எல்லை தாண்டிச் சென்றதாக கடந்த மாதம் 10 ஆம் திகதி மன்னார் பேசாலை பகுதியை சேர்ந்த ரவீந்திரன் அருண் குரூஸ், வெலிசோர் றேகன் பாய்வா ஆகிய இரு மீனவர்கள் இந்திய கரையோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சென்னையில் உள்ள புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவிற்கு குறித்த மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரி கடிதம் ஒன்றை கையளித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட மீனவர்கள் இருவரும் கடந்த 10 ஆம் திகதி காலை 5 மணியளவில் வழமை போன்று கடல் தொழில் நடவடிக்கைக்காக கடலுக்கு சென்ற நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக இந்திய கடல் பகுதிக்குள் சென்றதாகவும் தற்போது அவர்கள் இந்தியாவில் சென்னையில் உள்ள புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள சட்டத்தரணி ஒருவர் மூலமாகவே தற்போது தாங்கள் அவர்களை தொடர்பு கொள்வதாகவும் சட்டத்தரணியூடாகப் பிணை கோரியபோதும் பிணை வழங்கப்படவில்லை என கைது செய்யப்பட்ட மீனவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

எனவே தற்போது குறித்த விடயம் தொடர்பாக மீன்பிடித் துறை அமைச்சர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு அறியப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர்மற்றும்இலங்கை- இந்திய தூதரகங்கள் விரைவில் நடவடிக்கை மேற்கொண்டு சிறையில் இருக்கும் தனது கணவனை விடுவித்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மீனவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக பேசாலை பொலிஸ் நிலையம் மற்றும் மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவின் உப காரியாலயத்தில் பாதிக்கப்படவரின் குடும்பத்தினரால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# கடற்கரை வீதிகளை புனரமைத்து தரவும்

## கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட கரையோரக் கிராமங்களில் உள்ள கடற்கரை வீதியை புனரமைத்து தருமாறு கடற்தொழிலாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீன் பிடித்துறை கிராமங்களில் காணப்படும் கடற்கரை வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

குறிப்பாக மீனவக் கிராமங்களில் இருந்து கடல் தொழிலுக்கு செல்லும் பாதைகள் மற்றும் கடற்றொழில் கிராமங்களுக்கு செல்கின்ற வீதிகள் என்பன மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இந்த பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே குறித்த பிரதேசங்களில் காணப்படுகின்ற கடற்றொழில் கிராமங்களின் வீதிகளை புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-315)

# நிரந்தர வீடுகளின்றி தவிக்கும் ஒட்டுசுட்டான் மக்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சுமார் ஆயிரத்து 217 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகள் இல்லாத நிலையில் தற்காலிக வீடுகளிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 27 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சுமார் 6 ஆயிரத்து 700 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் ஆயிரத்து 217 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படாத நிலையில் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றன. (5-4-315)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2286

**கனகா**

யார் மீதும் எப்பொழுதும் எதற்காகவும் கோபப்படாதீர்கள்... அன்பால் சாதிக்க முடியாததைக் கோபம் சாதித்துவிடாது!



**விவேக்**

யாரென்றே அறியாத ஒருவர் அழும்போது காரணமேயில்லாமல் நம் கண்களும் கசியுமாயின் அதுதான் மனிதநேயம்



**கலைவாணி**

மேலே ஏறும் போது சந்திப்பவர்களிடம் இனிமையாகப் பழகுங்கள் ஏனெனில் கீழே இறங்கும் போதும் அவர்களை தான் சந்திக்க வேண்டியதாக இருக்கும்



**சுமதி**

செலவழிக்க சில்லறை கூட இல்லாத போது தான் தெரியும் வீணாக நாம் செலவழித்த பணத்தின் அருமை




**முருகையா**

குறையைத் தனிமையில் சொல் குணத்தைக் கூட்டத்தில் சொல்



**காயத்திரி**

நமக்கு நாம்தான் துணை என்பதை ஒரு கட்டத்தில் உணர்த்திவிடுகிறது இந்த வாழ்க்கை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்தப் பரந்த உலகிலே எதுவுமே நிலையில்லை. நிலையாமை ஒன்றே நிலைத்திருக்கின்றது. ஆகையால்தான் உலகப் பொருட்களில் இன்பம் காண முடிவதில்லை. ~புத்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாயிற் கடைப்பட்ட நம்மை... என்பதன் பொருள் அறிக!

நாய் நன்றியுள்ள பிராணி. தன்னை வளர்த்த எஜமானுக்கு விசுவாசமாக இருக்கக்கூடிய நாயின் மோப்ப சக்தி காரணமாக பாதுகாப்புத் துறையிலும் நாய்க்கு முன்னுரிமை உண்டு.

இவ்வாறு நன்றி உணர்விலும் மோப்ப சக்தியிலும் முன்னிலை வகிக்கக்கூடிய நாயைக் கடைப்பிறப்பாகக் கருதுகின்ற வழக்கம் நம்மிடையே உண்டு.

இந்த நடைமுறை அஞ்ஞான இருளில் தத்தளிக்கும் நமக்குள் மட்டும் என்றால் இல்லை. திருவாசகம் தந்த மணிவாசகர் *நாயினேனை* என்றும் *நாயிற் கடைப்பட்ட நம்மை...* என்றும் பாடி, தன்னைத் தாழ்த்தி இறைவனிடம் இரங்கி வழிபடுவதைக் காண முடியும்.

நன்றியுள்ள பிராணியாக நாய் இருக்கின்றபோதிலும் *நாயிற் கடைப்பட்ட நம்மை...* என்று மணிவாசகர் சொல்லக்காரணம் என்ன? என்று ஆராய்ந்தால், உலகிலுள்ள அத்தனை ஜீவராசிகளும் இறைவனால் உள்ளுணர்வாய்த் தரப்பட்ட சிற்றின்பத்தை அனுபவித்துக் கொள்ள, நாய்களுக்கு மட்டும் சிற்றின்பமே பெருந்துன்பமாய் அமைந்து விடுகின்றது.

இதன் காரணமாக நாய்கள் கடைப்பிறப்பு எனக் கருதப்பட்டன.

இது தவிர, இன்னோர் காரியமும் நாய்களைக் கடைப்பிறப்பாகக் கருதக் காரணமாயிற்று.

அதாவது சதை ஏதுமற்ற வரண்ட எலும்புத் துண்டுகளை தூக்கிச் சென்று அவற்றைக் கடிக்கின்றபோது, நாய்களின் பல் ஈறுகளில் இருந்து இரத்தம் சிந்தி எலும்பை நனைக்கும்.

அவ்வாறு எலும்பை நனைக்கின்ற குருதி தன்னுடையதென்று அறியாத நாய்; அக்குருதி எலும்பில் இருந்து வருவதாக நினைத்து எலும்புத் துண்டை தொடர்ச்சியாகக் கடித்துக் கொண்டே காலம் போக்கும்.

இவ்வாறு அவமே காலத்தைக் கழிக்கும் செயலும் நாயைக் கடைப்பிறப்பாக்கிற்று.

இதை நாம் கூறும்போது, இது எதற்கானது என்று நிச்சயம் நீங்கள் கேட்பீர்கள்.

என்ன செய்வது, எங்களுக்குள்ளும் எலும்பைக் கடித்து எங்கள் குருதியைக் கொட்டிக் கொண்டு அது எலும்பில் இருந்து வெளியேறும் குருதி என்று நினைத்து காலத்தை வீணே கழிக்கின்றோமல்லவா அதனால்தான் *நாயிற்கடைப்பட்ட நம்மை...* என்று மணிவாசகர் அருளிய வாசகத்தின் பொருள் உணர்ந்து கூறினோம். ஏற்றிடுக!

# நான் ஒருபோதும் கட்சி அரசியலுக்கோ தேர்தல் அரசியலுக்கோ வரமாட்டேன்

## வேலன் சுவாமிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நான் ஒருபோதும் கட்சி அரசியலுக்கோ, தேர்தல் அரசியலுக்கோ வரமாட்டேன் என்று வேலன் சுவாமிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் கொள்கைக்கு அமைய அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஒருபோதும் அரசியலுக்கு வரமாட்டார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வேலன் சுவாமிகளை முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்கலாம் என்ற கருத்து வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதுதொடர்பில் கருத்து வெளிடும்போதே வேலன் சுவாமிகள் இந்த மறுப்பை வெளியிட்டுள்ளார்.

“பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள்பேரெழுச்சி இயக்கத்தின் கொள்கைகளில் ஒன்றான உறுப்பினர்கள் எவரும் கட்சி அரசியலிலோ தேர்தல் அரசியலிலோ ஈடுபடுவதில்லை என்பது என்னையும் சாரும்.

நாம் அரசியல் மற்றும் சமூக மட்டங்களை இணைத்து உரிமைகளுக்கான போராட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலேயே எமது பணியை முன்னெடுப்போம்” என்றும் வேலன் சுவாமிகள் மேலும் தெரிவித்தார். (ம-3,33)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகக் கல்லூரி, பல்கலைக்கழக விடுதி, நாச்சிமார் கோவிலடி, நொதேர்ண் இண்டஸ்ரீஸ் கொக்குவில், 3 ஆவது குறுக்குத் தெரு, அம்பன், அம்பன் மருத்துவமனை, கடற்கரை பகுதி மணற்காடு, கற்கோவளம், குடத்தனை, குடத்தனை நீர்வழங்கல், பருத்தித்துறை வெளிச்சவீடு, மணற்காடு, மந்திகை, மாதனை, முள்ளி, நடுக்குடத்தனை, நெல்லண்டை வல்லிபுரம் கோவில் பருத்தித்துறை வீதி, பொற்பதி, புனிதநகர், சிவப்பிரகாசம், உபயகதிர்காமம், வலிகண்டி, வல்லிபுரக் கோயில் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, வல்லிபுரம் நீர் வழங்கல் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கொன்வெண்ட் வீதி, எழுத்தூர், எமில்நகர், எருக்கலம்பிட்டி, எருக்கலம்பிட்டி மேற்கு, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி 4 ஆவது மைல்கல், ஜோசப் வாஸ் நகர், கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படைமுகாம், மாலுவாடி சந்தி, மன்னார் நகரம், மன்னார் நகரம் இலங்கை மின்சார சபை யடி, மூர்வீதி, நளவன் பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), ரைமக்ஸ் ஆடையகம் அருகில், இளையோர் சேவை மையத்தடி, ஓலைத்தொடுவாய், ஒல்லிமோட்டை, படப்பாடி நீர்வழங்கல், பள்ளி முனை, பருத்திப்பண்ணை, பாவிலுப் பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல் பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு கடல் பக்கம், புதுக்குடியிருப்பு, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்டியன் தேவாலயம், சணிகிராமம் தலைமன்னார், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்புத் திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தோட்டவெளி, துள்ளு குடியிருப்பு திட்டம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ்தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கீரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரி வளாகம், மன்னார் மருத்துவமனை, மன்னார் நீர்வழங்கல் சபை, புதிய சில்க் ரோடு அகுடிக் கம்பனி பிறைவேற் (லிமிடெட்), கடல் உணவு களஞ்சியம், பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ், தலைமன்னார், தப்ரோபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார்வைத்தியசாலை, தலைமன்னார்கடற்படை முகாம், ரைமக்ஸ் ஆடை, வங்காலைப்பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நீர் வழங்கல்-தோட்டக்காடு, இளைஞர் படைப்பயிற்சிமையம், கார்கில்ஸ் பூட்சிற்றி, மன்னார், வங்காலைப்பாடு இலங்கைப் போக்குவரத்து சபை மன்னார், பேசாலை ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வெற்றி பெற்றவர்களைக் கவனி

❖ நாம் முன்னேற முதலில் நம்மிடம் நம்பிக்கை வேண்டும். பிறகு கடவுளிடம் நம்பிக்கை வேண்டும். தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன் கடவுளிடமும் நம்பிக்கை வைக்க முடியாது.

❖ உள்ளத்துக்குள் இருக்கும் அனைத்தையும் துறந்துவிடு, வைராக்கியத்தைக் கடைப்பிடி, இதுவே உண்மையான தியாகம். இது இல்லாமல் உனக்கு ஆன்மிகம் கிடையாது.

❖ உள்ளம் தூய்மையானால் உலகமும் தூயதாகிவிடும். இந்த உண்மையை உலகுக்கு கூற வேண்டிய அவசியம், முன்பு என்றும் இல்லாத அளவுக்கு இப்போது ஏற்பட்டுள்ளது.

❖ கல்வி, அறிவு, செல்வம், ஆள்பலம், வலிமை, தைரியம் என்று இயற்கை நமக்கு கொடுத்திருக்கின்ற அனைத்தும், பிறருக்குக் கொடுப்பதற்குத் தான்.

❖ வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்களைக் கவனி. ஒவ்வொருவரின் பின்னணியிலும், அளவற்ற கடமையுணர்வும், நேர்மையும் இருந்தே தீரும்.

❖ ஆன்மிகத்திற்கு ஜாதியில்லை. ஜாதி என்பது வெறும் சமுதாய ஏற்பாடுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2021 முதல் 13.04.2022 வரை

## வரவை விட செலவு அதிகரிக்கும் நேரம்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**கும்ப இராசி வாசகர்களே!**

பிறக்கும் புத்தாண்டில் உங்கள் இராசிநாதன் சனிபகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், ஏழரைச் சனி தொடங்கி விட்டது. எனவே விரய்ங்கள் கூடுதலாக இருக்கும். எதையும் சமாளிக்கும் பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். குடும்பச் சுமை கொஞ்சம் அதிகரிக்கும். தடைகளும் தாமதங்களும் வந்து அலைமோதும். உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் போன்றவை திடீரென வந்து மனக்குழப்பத்தை உருவாக்கலாம். வாக்குவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சியை அதிகரித்துக் கொள்ள இயலும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே குரு பகவான் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. எனவே வருமானம் திருப்தி தரும் என்றாலும் சேமிக்க இயலாத அளவிற்கு சுப விரயங்களும் வீண் விரயங்களும் வந்து கொண்டேயிருக்கும். உடல்நலத்தில் எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட தொல்லைகள் ஏற்பட்டு, மாற்று மருத்துவத்தின் மூலம் உடல்நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு தொகையைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் விரயாதிபதி சனிபகவான் பலம் பெற்றிருக்கின்றார். உங்கள் சுயஜாதக அடிப்படையில் ஏழரைச் சனி முதல் சுற்றா? நடுச்சுற்றா? மூன்றாவது சுற்றா? என்பதை அறிந்து கொண்டு செயற்படுவதே உத்தமம். சனி முதல் சுற்றாக இருக்குமேயானால் மனச்சுமை அதிகரிக்கும். மக்கள் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்வது அரிது. விரயங்கள் கூடுதலாக இருக்கும். பணிபுரியுமிடத்தில் பலவிதமான தொல்லைகளைச் சந்திக்க நேரிடலாம். பணி நீக்கம் செய்யப்படக் கூடிய வாய்ப்புகளும் உருவாகலாம். திறமைக்கு அங்கீகாரம் கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. அனுபவமிக்கவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பதன் மூலமே உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி காண இயலும். இரண்டாவது சுற்றாக சனி வருமேயானால் ஓரளவு கடுமை குறையும். மூன்றாவது சுற்றிலும் ஓரளவு கடுமை குறையும். மூன்றாவது சுற்று நடைபெறுபவர்கள் ஆரோக்கியப் பாதிப்புகளை அதிகம் சந்திக்க நேரிடும். எதிர்பாராத விரயங்களும், உறவினர் பகையும் ஏற்படும்.

மூன்றாமிடத்தில் கூட்டுக்கிரக யோகமாக நான்கு கிரகங்களின் சேர்க்கையுள்ளது. புத - ஆதித்ய யோகம், புத - சுக்கிர யோகம், செவ்வாய், சுக்கிரன் பரிவர்த்தனை யோகம் போன்றவை செயற்படுகின்றன. ஆனால் சுக ஸ்தானத்தில் ராகுவும் செயல் ஸ்தானத்தில் கேதுவும் இருப்பதால் எந்தவொரு காரியத்தையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உண்டு. சில காரியங்களில் போராடி வெற்றிபெற வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆண்டின் தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசார கதியில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். அதோடு 16.6.2021 முதல் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். 14.9.2021 முதல் 12.10.2021 வரை, மகர இராசியில் குரு பகவான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை தன இலாபாதிபதி குரு, வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பணப்புழக்கத்தில் தடை ஏற்படும். கொடுக்கல் - வாங்கல்களில் சிக்கல்கள் ஏற்படும். 'வாங்கியதைக் கொடுக்க முடியவில்லையே, கொடுத்ததை வாங்க முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வந்தும் பணிபுரிய செல்ல இயலாத சூழ்நிலை உருவாகும்.

**குருப்பெயர்ச்சி காலம்**

ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குருபகவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். 13.4.2022 இல் மீண்டும் மீன இராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கின்றார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 5, 7, 9 ஆகிய மூன்று இடங்களில் பதிகின்றது.

பூர்வபுண்ணிய ஸ்தானம் மற்றும் பாக்கிய ஸ்தானம் புனிதமடைவதால், இக்காலத்தில் கொஞ்சம் நற்பலன்கள் நடைபெறும். இனம்புரியாத கவலையில் சிக்கியிருந்த உங்களுக்கு, இப்பொழுது ஏதேனும் ஒரு சில வழிகளில் நன்மைகளும் கிடைக்கும்.

ஜென்ம குருவாக இருப்பதால் இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை நிகழலாம். இருப்பினும் ஏழரைச் சனி நடைபெறுவதால், எங்கு மாறினாலும் இதே நிலைதான் ஏற்படும். எனவே வரும் மாற்றங்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

குருவின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால் கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். கடமையில் இருந்த தொய்வு அகலும். பெற்றோர்களின் மணி விழாக்கள், பவள விழாக்கள் போன்றவை நடைபெறும் அமைப்பு உண்டு. இதுபோன்ற காலங்களில் குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டு வந்தால் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லத்தில் சுபச் செய்திகள் வந்த வண்ணமாக இருக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**ராகு-கேது பெயர்ச்சி காலம்**

21.3.2022 அன்று மேடத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 3 ஆம் இடத்திற்கு ராகுவும் ஒன்பதாம் இடத்திற்கு கேதுவும் வருகிறார்கள். 3 இல் ராகு சஞ்சரிக்கும் போது முன்னேற்றம் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. என்றாலும் பாக்கிய ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் பல நல்ல வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். உடன் பிறந்தவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள். 'சொத்துக்களை நீங்கள் வைத்துக் கொண்டு அதற்குரிய தொகையை எங்களுக்குத் தாருங்கள்' என்று உடன்பிறப்புகள் உங்களிடம் கூறலாம்.

9 ஆம் இடமான பிதுர்ராஜ்ஜிய ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கும் கேதுவால், தந்தை வழி உறவினர்களின் பகை மாறும். பூர்வீகச்சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் விலக புதிய வழிபிறக்கும். அலுவலகங்களிலோ அல்லது வங்கிகளிலோ இதுவரை கடன்கேட்டு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு, கால தாமதங்கள் அகன்று கைக்குப் பணம் கிடைக்கலாம். தெய்வத் திருப்பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். இத்தனை நன்மைகள் கிடைக்குமென்றாலும் ஏழரைச் சனி நடைபெறுவதால் திசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு எதிர்பார்த்தபடி நற்பலன்கள் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். வழிபாட்டின் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும்.




**சனியின் வக்கிர காலம்**

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனிபகவான் வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். வரவு வரும் முன்னதாகவே செலவுகள் காத்திருக்கும். பயணங்களால் பலன் கிடைப்பது அரிது.

ஒரு காரியத்தை ஒரு முறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகும். நாணயப் பாதிப்புகள் கூட ஏற்படலாம். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ளமாட்டார்கள். 'வீடு கட்டியும் வாடகைக்கு விட முடியவில்லையே' என்று ஒருசிலர் கவலைப்படலாம். இடமாற்றம், உத்தியோக மாற்றம் கிடைக்கும். ஆனால் அந்த மாற்றங்களால் திருப்தி ஏற்படாது.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

14.4.2021 முதல் 3.6.2021 வரை, 4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 24.10.2021 முதல் 7.12.2021 வரை, செவ்வாய் - சனி பார்வை உள்ளது. இக்காலத்தில் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். உங்கள் செயற்பாட்டில், மற்றவர்கள் குறை கண்டுபிடிக்க வாய்ப்புள்ளது. மதிப்பையும் மரியாதையையும் தக்க வைத்துக்கொள்ள இயலுமா? என்பது சந்தேகம்தான். மக்கள் செல்வங்களால் சில பிரச்சினைகள் உருவாகி மனக்கவலையைக் கொடுக்கும். குறிப்பாக விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டிய நேரம் இது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டு விரயச் சனியின் ஆதிக்கத்தில் இருப்பதால், கூடுதல் விரயங்களை சந்திக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். குடும்ப ஒற்றுமை குறையாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

கணவன் - மனைவிக்குள் பிணக்குகள் ஏற்படாமல் இருக்க, அனுசரிப்பும் விட்டுக் கொடுக்கும் தன்மையும் வேண்டும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சியில் விரயம் ஏற்படும் என்றாலும் முடிவில் காரியம் கைகூடிவிடும். தாய் மற்றும் உடன்பிறப்புகள் ஓரளவே உதவியாக இருப்பர். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைப்பது அரிது. உடன் பணிபுரிபவரால் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானை வழிபடுவதோடு, அனுகூலம் தரும் நாளில் காகவாகனத்தானைக் கைகூப்பித் தொழுதால் கனவுகள் அனைத்தும் நனவாகும். காரிய வெற்றியும் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் புரைக்கேறி...

நேற்று பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பால் புரைக்கேறியதால் குழந்தை சிரமப்பட்டதை அடுத்து முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் குழந்தை உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது.

மேலதிக விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,100)

## 7 பேர் பலி...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 615 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் மேலும் 129 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் ஏற்கெனவே கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழ்.மாவட்ட...

வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்திலும் 588 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 7 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர். மற்றைய இருவரும் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள்.

தெல்லிப்பழை வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது" என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(ம-3,18,33)

## இளைஞன்...

தேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த செல்வநாயகம் விதுசன் (வயது -25) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-3,15,350)

## வரணியில் விபத்...

ழந்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி இரவு குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் கொடிகாமம் சென்றுவிட்டு வரணி நோக்கி செல்லும்போது வீதியால் சென்ற சைக்கிளுடன் மோதியே இவ் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தினால் பலமாக அடியுண்ட இளைஞன் கோமா நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இதில் வரணி தாவளை இயற்றாலையைச் சேர்ந்த தவராஜா டினோஜனன் (வயது - 19) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## வடமராட்சி...

காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு முள்ளிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் வடமராட்சி துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்தவர்களில் ஒருவர் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினர் சட்டவிரோதமாக பிக்கப் ரக வாகனத்தில் மணலை ஏற்றிச் சென்றோரை இடைமறித்தபோது விசேட அதிரடிப் படையினர் மீது மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் வாகனத்தால் மோதியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில்யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்தே இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவத்தை அடுத்து சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸார், இராணுவம் குவிக்கப்பட்டதுடன் அங்கிருந்து தப்பிச் சென்ற பிக்கப் ரக வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-3,18,33,60)

## ஜனாதிபதி...

கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் நேற்றுக் காலை செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று (நேற்று) காலை தன்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு மிகவும் இழிவான-கெட்ட வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்தியதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒரு அரச தலைவருக்கு சற்றும் பொருத்தமற்ற வகையில் அவர் என்னைத் திட்டித் தீர்த்தார். அவரது பேச்சில் ஆத்திரம் நிரம்பியிருந்தது என்றும் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரத்தை சட்டமூலமொன்றின் ஊடாக சீனாவிடம் கையளிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. இவ்வாறு செய்வதன் ஊடாக சீனாவுக்கு சொந்தமான தனியான நாடாகவே துறைமுக நகரம் மாறிவிடக் கூடிய அபாயம் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே இன்று (நேற்று) தன்னை தொலைபேசியில் அழைத்த ஜனாதிபதி அச்சுறுத்தும் வகையில் மிகவும் இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்தி திட்டித் தீர்த்ததாக விஜயதாஸ ராஜபக்ஷ கூறினார்.

ஜனாதிபதியிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தபோது கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் குறித்து விவாதிக்கவே அவர் அழைப்பதாக நான் கருதினேன்.

ஆனால் அவர் என்னைக் கடுமையாக அச்சுறுத்தினார். பாராளுமன்ற உறுப்பினரான என்னை அவர் அச்சுறுத்தியமையை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

அவரது அச்சுறுத்தலால் எங்களுடைய சொந்த வாழ்க்கை, குடும்பத்தின் பாதுகாப்பு குறித்து அச்சம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். இந்த அச்சுறுத்தல் குறித்து இலங்கை பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டுள்ளதாகவும் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஒரு கோப் அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவேளை எனது வீட்டில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. எனது வீடு சுற்றிவளைக்கப்பட்டது. கடுமையான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த நேரத்தில் தனது வீட்டிற்கு வரும் அனைத்து தொலைபேசி அழைப்புகளையும் இராணுவம் கண்காணித்து பதிவு செய்ததாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

(ம-3)

## குடும்பஸ்தர்...

ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த நபர் மீது குடும்பத் தகராறு காரணமாக கத்திக்குத்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தில் நீராவிப்பிட்டி பகுதியை சேர்ந்த 39 வயதுடைய முகமட் றஜாஜ் என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## யாழ்ப்பாணத்தில்...

ஊடகங்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

மாவட்டத்தில் கொரோனாத் தொற்று பரவலினால் தனியார் கல்வி நிலையங்கள் முடக்கப்பட்டதுடன், திருமண நிகழ்வுகள், பொது நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் திங்கட்கிழமை தொடக்கம் முடக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களை திறப்பதற்கு மாகாண சுகாதார பிரிவு தீர்மானித்துள்ளது.

எனினும் மாவட்டத்தில் திருமண மண்டபங்களில் திருமணம் மற்றும் பொது நிகழ்வுகளுக்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்தும் நீடிக்கும் எனவும் மாவட்ட அரச அதிபர் மேலும் கூறியுள்ளார். (ம-3)

## முற்றத்தில் கிடந்த...

புதுக்குடியிருப்பு வேணாவில் 1ஆம் வட்டாரத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

வேணாவில் கிராமத்தினை சேர்ந்த 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான ஜெயக்குமார் என்ற குடும்பஸ்தரே மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

மழை பெய்து கொண்டிருந்தவேளை வீட்டு முற்றத்தில் காணப்பட்ட கோடரியினை பாதுகாப்பாக எடுத்துவைப்பதற்காக குடைபிடித்துக்கொண்டு சென்றுள்ளார்.

மின்னல் முற்றத்தில் நின்ற வேப்ப மரத்தில் தாக்கியுள்ளது. இதன்போது குறித்த குடும்பஸ்தரும் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

வயிற்றிலும் காலிலும் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் அயலவர்களின் உதவியுடன் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக் சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-3)

## யாழ்.கல்வி வலய...

மதியினை சுகாதாரத் துறையினர் வழங்கியுள்ளனர். அதற்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகள் தவிர்ந்த திருமண மண்டபங்கள், மக்கள் ஒன்றுகூடுவதற்கான தடைகள் மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

## இந்தியாவில்...

தாண்டிய கொரோனாத் தொற்று பதிவாகியுள்ளது.

இதன்படி நேற்று வெள்ளிக்கிழமை மட்டும் 2,17,353 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 2 இலட்சத்து 17 ஆயிரத்து 353 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் மொத்த தொற்று எண்ணிக்கை 1,42,91,917 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல், தொற்று பாதிப்புகளுக்கு ஒரே நாளில் 1,185 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 1,74,308 ஆக உயர்ந்துள்ளது.

தொற்றிலிருந்து கொரோனா பாதிப்பில் இருந்து 1,18,302 பேர் குணமடைந்துள்ளனர். இதன்படி குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,25,47,866 ஆக உயர்ந்துள்ளது. (ம-3)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## சுகாதார நடை...

மிக இறுக்கமாக கடைப்பிடிப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கூறியிருக்கின்றார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், சர்வதேச அளவில் குறிப்பாக அயல் நாடுகளில் கொரோனா வைரஸ் வேகமாக பரவுவது குறித்து நாங்கள் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம்.

இலங்கைக்குள் வருபவர்களை இலக்குவைத்து நாங்கள் இறுக்கமான தனிமைப்படுத்தல் நடைமுறைகளை பின்பற்றுவதற்கு இதுவே காரணம் என தெரிவித்துள்ளார்.

இறுக்கமான நடைமுறைகளை தளர்த்த வேண்டும் என வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. ஆனால் சர்வதேச மற்றும் ஆசிய பிராந்திய நடைமுறைகளை பார்க்கும்போது அதனை அடிப்படையாக வைத்து நாங்கள் முடிவுகளை எடுக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்புகள்

German, Swiss, Ostria, Deutsche மொழி மற்றும் Holland (Netherlands) Dutch மொழி வகுப்புகள் Embassy இன் Exam இற்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது. (6598)

Mrs. P. Kajenthini
**077 160 4823**
Jaffna.

## விற்பனைக்கு

புத்தம் புதிய பதிவு செய்யப்படாத TVS முச்சக்கரவண்டிகள் விற்பனைக்கு உண்டு.
( குறைந்தளவு கையிருப்புக்கள் மாத்திரமே. ) (C-1987)

**077 715 1101, 077 129 0712**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. (6597)

**076 702 3565**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை கிழக்கு, ஐயனார் வீதியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
( தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 மீற்றர் தூரம் )
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
( தரகர் தேவையில்லை ) பரப்பு 5 இலட்சம். (6573)

**077 814 7389**
**077 614 7333**

## வேலை வாய்ப்பு

யாழ். குடா நாட்டில் பிரசித்தி பெற்ற காப்புறுதி நிறுவனம் ஒன்றில் அடிப்படைச் சம்பளத்துடன் கூடிய நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

- Insurance Consultant
- Individual sales
- Team manager
- Manager

(Salary :- 20,000/= - 60,000/= Basic)
19.04.2021 இலிருந்து நேர்முகத் தேர்வு நடைபெறும்.
இடம் :- யாழ்ப்பாண கிளை
இல.86, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6587)

**077 520 2726**
**077 192 0206**

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

TVS wego மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. BFU - இலக்கம்/ கறுப்பு நிறம்/ 28, 000 கிலோ மீற்றர்/ First owner. (6596)

**077 898 9691**
யாழ்ப்பாணம்

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலை செய்வதற்கு 35 - 45 வயதிற்குட்பட்ட பெண் ஒருவர் தேவை. வயதான அம்மாவிற்கு சமைக்க, வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக் கூடியவர்கள் மட்டும் விரும்பத்தக்கது. (6599)

**077 293 5265**
இடம் : சுண்டுக்குளி

## பணியாளர் தேவை

கோண்டாவிலில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பெண் பணியாளர் தேவை.

தொடர்பு (6591)
**076 092 8460**




## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org (6596)

**021 222 8093** புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய் கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
**தரகர் தேவையில்லை.**
(கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்) (C-1993)

**☎-077 468 3354**
**077 203 6402, 077 235 2656**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (6582)

**☎-076 564 6282**

## உடனடி வேலை வாய்ப்பு



V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை (C-1895)

வாடிக்கையாளர் சேவை அலுவலர்

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்
வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)
சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்
சம்பளம் - 25'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**0777068777**
v2vacancies@gmail.com

## அன்னா

EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-1927)
070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## வீட்டு உதவியாளர் தேவை

வடமராட்சியில் இருவர் கொண்ட வீட்டில் தங்கியிருந்து வீட்டு உதவிகளை செய்யக் கூடிய பெண் உதவியாளர் தேவை 40 வயதுக்கு மேல் விரும்பப்படும் சுகதேகியாக இருத்தல் வேண்டும் சம்பளம் ரூபா 20,000 மேல் தரப்படும் பணியாற்ற விரும்புவோர் தொடர்பு கொள்க தரகர்கள் தேவையில்லை (C-1992)

**076 484 7171**

## Yarl Geek Challenge
### Season 10 - Junior

Yarl IT Hub இனால் வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து வட மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் புத்தாக்கத்திறனை விருத்திசெய்யும் முகமாக வருடாந்தம் நடாத்தப்படும் Yarl Geek Challenge - ஜூனியர் போட்டியானது இவ்வருடம் பத்தாவது தடவையாக இடம்பெறவுள்ளது.

நீங்கள் பிரச்சனைகளை அல்லது தேவைகளை இனங்காணும்போது அவற்றிற்கு தீர்வுகாணும் ஆர்வமுள்ள மாணவரா? அப்படியாயின் Yarl Geek Challenge - Junior உங்களுக்கானது. இப்போட்டிக்கு இன்றே உங்கள் அணியை பதிவு செய்து விண்ணப்பியுங்கள் அத்துடன் ஆர்வமுள்ள மாணவர்களை விண்ணப்பிக்க ஊக்குவியுங்கள்.

இணையத்தினூடாக விண்ணப்பிக்க
**https://tinyurl.com/ygc10-junior**

இம்முறை போட்டிகள் பின்வரும் ஐந்து பிரிவுகளில் இடம்பெறவிருக்கின்றன.

- இணையத்தளம் ஒன்றை உருவாக்குதல்
- Mobile Application ஒன்றை உருவாக்குதல்
- Hardware Application ஒன்றை உருவாக்குதல்
- பாட ரீதியாக கற்ற விஞ்ஞானத்தை பிரயோகித்து விளக்கமளிக்க கூடிய ஒன்றை உருவாக்குதல்
- இதர புத்தாக்கத் தயாரிப்பு ஒன்றை உருவாக்குதல்

(6588)

**பயிற்சிப் பட்டறைகள்**

இப்போட்டிகளின் ஆரம்ப கட்டமாக மாணவர்களுக்குத் தொடர் பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட இருக்கின்றது. இது தொடர்பான விபரங்களை Yarl IT Hub இன் பேஸ்புக் பக்கத்தினூடாக (Yarl IT Hub) அறிந்துகொள்ளலாம். முதலாவது பயிற்சிப் பட்டறை ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

மேலதிக விபரங்களுக்கு
www.yarlithub.org/ygc | www.fb.com/yarlithub | event@yarlithub.org | 0767973158

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
**UK-1000/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1925)

**0768226240** DHL

## TECHNO WORLD
### தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

**A/L 2023 தொழினுட்ப பிரிவு** (C-1998)

- பொறியியல் தொழில்நுட்பவியல்.
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்.
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
- I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம் (7), சித்திரம்.

19.04.2021 (Time : 3.30 pm)



**Call Now: 0770175346**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org